[illegible] 1923-29

പുസ്തകം 14 ലക്കം 6

3L
R65 [illegible]
N24·14·6
186737

960

Regd. No. M. 916.

# THE VEDANTA DIPIKA

# வேதாந்த தீபிகை.



ருத்ரோத்காரி௵,
1923—1924.
ஸம்புடம் 14.

பங்குனி௴.
MARCH.
ஸஞ்சிகை 6.

பத்ராதிபர்.
நடாதூர்
ஸ்ரீநிவாஸாசார்யர்,
பி.ஏ., பி.எல்.

கார்யதர்சி.
ஆர். ஸ்ரீநிவாஸராகவ
அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.

| | |
|---|---|
| 1. பத்ராதிபரின் குறிப்புகள் | 169 |
| 2. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமும் ஸ்ரீபாஷ்யகாரரின் உபகாரமும்.— மஹாவித்வான் பண்டித ரத்னம் ஸ்ரீ. வே. ஸ. ஸ்ரீநிவாஸாசார்யர். | 174 |
| 3. குருபரம்பரைகளின் விமர்சசோதனம்.— ஸ்ரீ. உ. வே. விளாகம் ரா. நரஸிம்மாசார்யர். | 181 |
| 4. ஸ்ரீ மத்ராமாநுஜ மதாபிவ்ருத்தி.— ஸ்ரீ உ. வே. தி. ஈ. சடகோபாசார்யர் பி. ஏ. பி. எல். | 192 |
| 5. மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம்.— ஸ்ரீ உ. வே. வாஜபேயம். வீரராகவதாதாசார்யர். | 195 |
| 6. கோபத்தைப் போக்கும் வழி.— ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உ. வே. ரங்கநாதாசார்யர். | 198 |
| 7. பத்ரிகா விமர்சம்.— பத்ராதிபர். | 200 |
| 8. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை, தமிழ்மொழிபெயர்ப்புடன்.— ஸ்ரீ. உ. வெ. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். | 33 |

K. R. Press, Madras.

வர்ஷச்சந்தா ரூ. 3—0—0.]
[ஸஞ்சிகை 1-க்கு அணா 4.

# ஜெர்மன்



# டிக்-டாக் கடியாரம்

புதியதாகவும், நூதனமாகவும், ஜெர்மன் தேசத்தில் இருந்து வரவழைக்கப்பட்டது. சரியான காலம் காட்டக் கூடியது. மிக்க அழகாயும், மிக்க நேர்த்தியாயும் தயார் செய்யப்பட்டது.

**விலை ரூ. 3 தான்.**

இன்றே ஒன்று வரவழைத்துப் பாருங்கள்.

# இது வேண்டுமா?

உயர்ந்த கையில் கட்டும் கடியாரம் தோலுடன் அனுப்பப்படும்.




லீவர் மூவ்மெண்டு நெடுநாள் உழைக்கக்கூடுமான அழகுள்ள கை கடியாரம். செலவு அநேகம் ஆய்விட்டது.

**கையில் கட்டுவதற்கு மிக்க அழகாயுள்ளது.** விலை தோலுடன் ரூ. 7—8—0

**விலாசம்:—வி. எஸ். வாச் கம்பெனி.,** தபால்பெட்டி 105, மதராஸ்.


---

## விளம்பரம்.

தீபிகைக்கு 'வ்யாஸங்கள்' சந்தா, விலாஸ மாறுதல்கள், இன்னும் தீபிகை விஷயமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய விவரத்துக்கு ஆகும் கடிதங்கள் எல்லாம் ஸபையின் கார்யதரிசிக்கு, 2/11 ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம, வேப்பேரி போஸ்டு என்ற விலாஸத்துக்கு அனுப்பவேணும்.

வ்யாஸம் எழுதுகிறவர்கள் விஷயத்தை எளிதான தமிழ் நடையில் எழுதிப் பிரமாணங்களைக் கீழ்க்குறிப்புக்களாக எழுதியனுப்பவேணும். ஸம்ஸ்க்ருத ஸ்லோகங்களுக்கும் வாக்கியங்களுக்கும் கூடவே தமிழ் மொழிபெயர்ப்பு எழுதிவிடவேணும். வ்யாஸங்கள நேரில் அச்சாபீசுக்கு அனுப்பப்படுவதால் எழுத்துக்களை ஸ்பஷ்டமாகவும் விரளமாகவும் கடுதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதி அனுப்பும்படி பிரார்த்திக்கப்படுகிறது.

மெம்பர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் விலாஸத்துக்கு ஸஞ்சிகைகள் அப்போதைக்கப்போது வெகு ஜாக்ரதையுடன் அனுப்பப்பட்டு வருகின்றன. ஸஞ்சிகைகள் வேண்டிய அளவு தான் அச்சிடப்படுவதால் தபால் மூலமாகவோ, ஸரியான முகவிலாஸம் இல்லாததினாலோ சேராத ஸஞ்சிகைகளுக்கு நாங்கள் உத்தரவாதமாகமாட்டோமென்று வினயத்துடன் தெரிவிக்கிறோம்.

பழைய ஸஞ்சிகைகள் அடங்கிய புஸ்தகங்கள் ஸ்வல்பமாக இருப்பதாலும் தேவை ஜாஸ்தியாக இருப்பதாலும், வேண்டியவர்கள் தாமதமின்றி எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

கார்யதர்சி.

ஸ்ரீ:

[illegible]

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— கடாஞர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி. ஏ., பி. எல்.

கார்யதர்சி:— ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 14.] ருதிரோத்காரி ௵, மாசி ௴. [ஸஞ்சிகை 6.

“ [illegible]

[illegible] ”

ஸ்ரீபாகவதம். 1-9-28.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

### ஹிந்துதேசத்தின் நவீன மதங்கள்.

மாட்டாதே யாகிலு மிம்மலர்தலை மாஞாலம் நின்
மாட்டாய மலர்புரையுந் திருவுருவ மனம் வைக்க
மாட்டாத பல சமய மதி கொடுத்தாய் மலர்த்துழாய்
மாட்டே நீ மனம் வைத்தாய் மாஞாலம் வருந்தாதே !

—திருவாய்மொழி - 3 ம், பத்து 1 திரு, 4 பாசுரம்.

அனாதியான கர்மம் அதடியாக அஜ்ஞானம், விபரீதவாஸனை ஆகிய இவைகள் சக்ரம்போல் ஜன்மம் தோறும் சுழன்று வந்து க்ஷேத்ரஜ்ஞர்கள் என்னப்பட்ட ஜநங்களைப் பிடிப்பதால், அவர்கள் நிரதிசயபோக்யமாய் மஹாநிதியைப்போல் ச்லாக்யமாய் இருந்துள்ள ச்ரிய: பதியின் திருமேனியிலே நெஞ்சை வைக்க யோக்யதை யற்றிருப்பதோர் புறம் நிற்க, அக்கர்ம வச்யதையினாலேயே அத்தகைய பகவத்ஸ்வரூபத்திலும் பகவானுடைய திவ்ய குணங்களிலும் நெஞ்சை வைக்க வொண்ணாதபடி புறம்பேயுள்ள பலசமய மதி பேதங்களையும், கர்மங்களுக்கீடாக பகவான் செய்யும் நிக்ரஹத்தின் (தண்டனையின்) பலனை அடைந்து வருந்தி ஒழிகிறார்கள் என்று இப்பாசுரத்தின் கருத்து.



18(737)

தற்காலத்தில் ஆஸ்திக்ய மென்பது அடையும் விசித்ர ரூபங்களைப் பார்த்தால், இவ்வர்த்தம் எவ்வளவு பொருத்தமுடையதா யிருக்கிறதென்பது விளங்கும். ஈச்வரன், பரலோகம், முதலிய விஷயங்களைச் சாஸ்த்ர உதவியன்றித் தெளியமுடியாதென்பது ஸஹஜமாய் யாவரும் அறிந்த விஷயம்; பன் முறைகளில் எடுத்துக் காட்டியு மிருக்கிறோம். அவரவர்களுக்குப் பரம்பரையாய்க் கிடைத்திருக்கும் சாஸ்த்ரங்களையே அவரவர்கள் ப்ரமாணங்களா அவலம்பிப்பதும் இயல்பே. அத்தகையவர்களைப்பற்றி அதிகக் கேள்வி பயனற்றதேயாகும். தந்தாமளவில் நிலைபெற்ற நம்பிக்கைகளும் ததநுகுணமான அநுஷ்டானங்களும் அவரவர்களுக்குண்டு. ஆனால் எக்காரணத்தினாலாவது சில அபிப்ராயங்களை மனதில் த்ருடமாகக் கொண்டவர்களாய்த் தம்மதத்தைப் பராமர்சித்து நடக்க யத்தனிப்பவர்கள் மத்யஸ்த த்ருஷ்டியை யிழந்து ப்ரமாணங்களை உள்ளபடி அர்த்தம் பண்ணாமல் தமது பிடிவாதம் ஒரு புறமும் ஸ்வமதாபிமானம் மற்றொரு புறமும் இழுக்கத் தம்மையறியாமலே விபரீதவழிகளிலிறங்கி நாஸ்திக்யபர்யந்தமாய்ச் சென்று முடிவது நிச்சயம். இவ்வர்த்தம் மஹாபாரதத்தில், '[illegible] ॥' (தானேற்கனவே மனதிற் கொண்ட விஷயங்களில் பிடிவாதமுடையவனாய், சாஸ்த்ரங்களில் தெளிவில்லாதவனாய் தர்மஸூக்ஷ்மங்களை யறியாதவனாய், அப்படியிருந்தும் பெரியோர்களிடத்தில் ஸந்தேஹங்களைக் கேட்டுத்தெளிய மனமில்லாதவனா யிருக்குமவன், தன்பிடிவாதத்தின் பயனாகக் குருடன் தன் போக்காய்ச்சென்று படுகுழியில் விழுவதுபோல் அஜ்ஞானமாகிற படுகுழியில் விழுந்து நாசமடைகிறான்) என்று ஸ்ரீக்ருஷ்ணனால் அர்ஜ்ஜுனனைக் குறித்து அருளிச் செய்யப்பட்டது. காண்டீவத்தை இழிவாய்ப் பேசினவர்களைக் கொன்றுவிடுவதாக அர்ஜ்ஜுனன் ஒருஸமயத்தில் சபதஞ்செய்திருந்தான். கர்ணயுத்தத்தில் களைப்படைந்த தர்மபுத்ரர் அர்ஜ்ஜுனனையும் அவன் வில்லையும் அச்சமயத்தில் சிறிது நெகிழ்ந்து பேசினார். கர்ணனாலன்றோ துர்யோதன ஸைந்யம் பலமடைந்திருந்தது! கர்ணன் மடிந்தால் கௌரவபலமும் ஒழிந்தபடியே யன்றோ! இப்படி யோசிக்காமல் தர்மபுத்ரர்பேசியதை ஸஹியாதவனாய் தான் மூடத்தனமாய்ச்செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றுவதே தர்மம் என்று ப்ரமித்துத் தன் மூத்தவராயும் ப்ராஜ்ஞராயும் ராஜதர்மமார்க்கத்தை யநுஸரித்தவராயும் ஸத்யஸந்தராயு மிருந்த யுதிஷ்டிரரைக் கொல்லுவதில் அநர்த்தத்தை யறியாமல் அர்ஜ்ஜுனன் அப்பாதகத்தி லிழிய வாரம்பித்தான். அச்சமயத்தில் பகவான் அவனைத் தெளிவித்தபடி யிது. அங்கு இக்கதையைச் சொல்லுகிறார். ஸத்யவாதியென்று க்யாதி பெற்று ஸத்தியக் கொடியை நாட்டின கௌசிகனென்பானொரு ரிஷபுத்ர [illegible]. அவனை '[illegible]' (தவஞ்



செய்பவன், ஆனால் பேதை, அதிக ஜ்ஞானமில்லாதவன்) என்றார் க்ருஷ்ணன்! ஒரு ஸமயத்தில் தானிருந்த வழியாய்த் திருடர்களுக்கு பயந்து ஓடிப் புதர்களில் ஒளிந்துகொண்டிருந்த சிலர்களைப்பற்றி அத்திருடர்கள் அவர்கள் எங்கே சென்றார்களென்று கௌசிகனைக் கேட்டபோது, உண்மை யுரைப்பதென்றால் என்ன வென்றறியாத ([illegible]) அவன், அவர்களைத் திருடர்களுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டான். திருடர்கள் அவர்களைக் கொன்றுவிட்டார்கள். இப்படி தர்மஸூக்ஷ்மத்தின் விவேகமில்லாமல் பெரிய தர்மாசரணம் செய்யப்புகுந்த கௌசிகனும் தன்வாக்கின் கொடுமையினால் மஹா கஷ்டமான நரகத்தை யடைந்தான் '[illegible] ॥') என்றார்!

புத்தர் யஜ்ஞத்தில் ப்ராணிவதை செய்யப்படுவதைக்கண்டு அருவருத்தார். அஹிம்மையன்றோ எல்லாத் தர்மங்களிலும் மேற்பட்டது என்று தீர்மானித்தார். ப்ராணி ஹிம்ஸையை ஆதரிக்கும் வேதம் ப்ராமாணமாகாதென்றார். சரீரத்தோடு இருந்தகாலத்தில் பிறர்க்கு நன்மை செய்வதே கருமமெனத் துணிந்தார். யுக்திக்கும் ப்ரத்யக்ஷத்துக்கும் எட்டாத மோக்ஷமென்பதிலாவது அதைக் கொடுக்கும் ஈச்வரனிடத்திலாவது அவருக்கு விச்வாஸமுண்டாகவில்லை. எனவே ப்ரத்யக்ஷத்தில் காணப்படும் ப்ராணிகளை விட வேறான ஆத்மாவென்று ஒரு தத்வமில்லை யென்றார். நாம் காண அநுபவிக்கும் ஸுகதுக்கங்கள் அடிக்கடி மாறி நிலையற்றிருப்பதால், எல்லாம் க்ஷணிகங்கள், தோன்றியவுடனே முடிகின்றவைகள், சாச்வதமான தொன்று மில்லை யென்று கண்டார். ஆகையால் சூன்யம் தான் உண்மை; அது தான் மோக்ஷம்; அதுதான் நிர்வாணம்; என்று முடித்தார்! கடைசியில் எல்லாம் சூன்யத்தில் தான்முடிகிறது என்று உபதேசித்தால், அதைக் கேட்கும் ஸாமன்ய ஜனங்களுக்குள் நாஸ்திக்யம் பெருகுவது மாத்திரம் நிச்சயமேயொழிய, இவ்வுபதேசத்தின் காரணமாய்த் தன் நலத்தை விட்டு வைராக்யத்துடன் பிறர் நன்மையையே நாடுவதென்பது ஸாதாரணமாய் ஏட்டுச் சுரைக்காயே யாவது திண்ணம். அசோகன் முதலிய சக்ரவர்த்திகளின் செல்வாக்கினால் சிலகாலம் நாட்டில்ஆஸேது ஹிமாசலம் பரவின இம்மதம், காலக்ரமத்தில் அத்தகைய பாஹ்ய (வெளியிலிருந்து கிடைத்த) பலம் குன்றினவாறே மனிதனுக்கு இயல்பாகவுள்ள அத்யாத்ம விஷயமான அவாக்களுக்கு (Spiritual Cravings) ச்சுணையடங்க ஸமாதானம்சொல்லமுடியாமல் அனாதியாய் சித் அசித் ஈச்வர தத்வங்களை ப்ரதிபாதித்து, ஈச்வராபிப்ராயத்துக் கிணங்க தர்மப்ரவர்த்தனம் செய்துவந்த வைதிக மதத்தின் முன் இருந்தவிடம் தெரியாமல் ஓடிவிட்டது. வைதிக மதம் அஹிம்ஸா தர்மத்தை முதலதாக வற்புறுத்தவில்லையோ! புத்தமத ஸம்பந்தமான கணக்கற்ற புஸ்தகங்களைக்கொண்டு அதன் சரித்ரத்தைப் பரிசீலனம் பண்ணினவர்கள், புத்தருடைய ஸ்வார்த்த

பரித்யாகத்தையும் அஹிம்ஸா உபதேசத்தையும் வெகு உயர்வாகப் பேசினார்களானாலும், அம்மதம் வேறில்லாக் கொடி போல் நின்ற நிலையைக் காணாமலிருக்கவில்லை. அன்றியும் பிற்காலத்திய பௌத்தர்கள் ஒருபக்கம் த்ருடபூர்வச்ருதர்களாய் (தம் முந்திய கொள்கைகளினாலேயே பிடிவாதமுள்ளவர்களாய்) மற்றொரு பக்கம் அம்மதத்தைப் பிறர் உகக்கும்படி செய்ய புத்தரைப் பற்றிய பலவிதமான கதைகளையும், அவர் மதத்தில் பலவிதமான லோகாந்தரங்கள், அவதாரங்கள், புருஷார்த்தங்கள், உபாயங்கள், முதலியவற்றையும் கற்பனை செய்துவிட்டார்கள் என்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

இப்படியே ஜைன மதத்தினுடையவும் சரித்ரம் காணப்படும். பௌத்த மதத்தின் சூன்ய வாதத்தை இம்மதம் ஒப்பவில்லையெனினும், அதைப்போல் இதுவும் ஸர்வேச்வரனை யில்லையென்று விட்டது. இதற்கு வேதம் ப்ரமாணமில்லையாயிற்று; எனவே வைதிக தர்மங்களும் அப்படியே. ஆனால் லோகாந்தரம் ஜன்மாந்தரம், பரமபுருஷார்த்தம் அதற்குபாயம் முதலிவைகளையெல்லாம் வேண்டிற்று. அதற்காக மனப்போக்கான கற்பனைகளைச் செய்து இவற்றுக்கெல்லாம் ப்ரயாணம் ஸர்வஜ்ஞனென்ற ஒருவனுடைய பேச்சே யென்றது! வேதங்களை ஆதாரமாகக் கொள்ளக்கூடாதென்ற இம்மதம் தான் கற்பித்த ஸர்வஜ்ஞனை லோகத்தார் பின்பற்ற எதிர்பார்த்தது! இங்கும் பின்வந்தவர்களுடைய 'த்ருடபூர்வச்ருத' மான அபிமானத்தால் உண்டான உபதேச பரம்பரைகளை விமர்சகர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்!

இப்படி ஏதோ இரண்டொரு அம்சங்களில் விசேஷமான அபிஸந்தி பண்ணித் தந்நிமித்தமாய் ப்ரமாணகதிகளை அழிக்கப்பார்த்து நூதனக் கொள்கைகளையும் ஆசாரங்களையும் ப்ரவர்த்தனம் செய்யப்புகுவது, நமது நாட்டில் தொன்று தொட்டு நடந்துவந்திருக்கின்றது. இவற்றிற்கு ராஜாங்கபலமும் ராஜீயக் குழப்பங்களும் நெருப்புக்குக் காற்றுப்போல் பல ஸமயங்களில் உதவியும் வந்திருக்கின்றது. இவ்வளவுக்கும் தப்பி வைதிகமதம் மிகுந்து ஜீவித்திருப்பது உலகத்துக்கே ஆச்சரியத்தை யுண்டாக்குகிறது! எனவே, இதில் ஸர்வோத்க்ருஷ்டமான யோக்யதை யொன்று நிலைத்திருக்கிறதென்னத் தட்டில்லை.

ஆதிமுதல் இவ்விதமாக உண்டான மதங்களைப் பரிசீலத்தால் அவற்றின் ப்ரவர்த்தகர்களெல்லாம் முக்கியமாய் வர்ணாச்ரம தர்மம், ஆஹார விவாஹ நியமங்கள், முதலிய சில நிபந்தனைகளுக்குக் கட்டுபட இசையாமலும் நாஸ்திக்ய புத்தியாலும் தந்தாம் கொள்கைகளைக் கிளப்பினார்கள் என்பது நன்றாய் விளங்கும். நந்தேசத்தில் மஹம்மதியருடைய ஆதிராஜ்யம் நடந்த ஸுமார் 1000 - வர்ஷங்களிலும், இங்கிலீஷ் ராஜாங்கம் நடக்கும் இந்த ஸுமார் 150 - வர்ஷங்களிலும், 'ஹிந்துக்கள்' என்பவர்களுக்குள் கிளம்பியிருக்கும் நூதன ஸமய பேதங்களுக்கு இத்தகைய நினைவுகளே காரணம்



விதேசத்தவர்களான மஹம்மதியரும் ஐரோப்பிய கிருஸ்துவர்களும், இங்கு ஆதிராஜ்யம் நடத்திவந்திருப்பது மட்டுமன்றியே தங்கள் தங்கள் மதங்களையும் நாட்டில் பரவச்செய்திருக்கிறார்கள். மஹம்மதிய அரசர்கள் பலாத்காரமாகச் செய்தார்கள்; ஆங்கில அரசாங்கத்தார் மத விஷயத்தில் நடுவு நிலைமை வஹித்தனரே யாயினும், ஐரோப்பியப் பாதிரிகள் தாராளமாய்த் தமது மதத்தை நாட்டில் பரவச்செய்ய இடமுண்டாயிற்று. மேலும் இப்பாதிரிகள், கல்விச் சாலைகள், வைத்யசாலைகள் முதலிவற்றை ஏற்படுத்தியும் தாழ்ந்தவர்களிடத்தும் ஏழைகளிடத்தும் பொதுவாய்க் காணப்படும் கஷ்டங்களை நிவர்த்திப்பதைப் பெரிய தர்மமென்று அநுஷ்டித்து அது கிருஸ்து மதத்தின் அஸாதாரண தர்மமென்று உபதேசித்தும், நமது மதத்தில் கொஞ்சங்கூட வாஸனையில்லாத சிறுவர்களுக்கு வர்ணாச்ரம தர்மாதிகளில் நம்பிக்கையைக் குலைத்தும், நம்மவர்களுடைய நினைவுகளைப் புதிய தாரைகளில் புகும்படி செய்கிறார்கள். தவிர தற்காலத்திய ஐரோப்பிய நாகரீகத்தின் பரம புருஷார்த்தம் உண்பதும் உறங்குவதுமே யாதலால் ஒருவன் தன்னளவில் தேடுவதும் பிறர்க்குபகரிக்கப் புகுவதும், அதற்காகத் தேடும் உபாயங்களும், இவற்றுக்கநுகுணமாகவே யிருக்கும். ஆத்மஹிதவிஷயமான மதக்கொள்கைகள் இதற்குத் தக்கபடியே மாறுவதும் ஆச்சரியமல்ல. ராஜீய விஷயங்களில் எல்லா மதஸ்தர்களும், எல்லா வகுப்பினர்களும், ஒத்துழைக்கவேண்டிய ஆவச்யகதையினடியாக எல்லா மதங்களையும் ஸமமாக பாவித்து மேடு பள்ளங்களை நிரவிவிடவேண்டுமென்னும் ஆவல் வ்ருத்தியாகின்றது. இதற்கிடையூறாக நினைக்கப்படும் மதாசாரங்களில் நம்பிக்கை குலைகின்றனது. அவைகளை யொழித்து யதேச்ச விஹாரிகளாகவேண்டுமென்னும் ஆத்திரத்தினால் விசித்திரங்களான சீர்திருத்தமுறைகளை ஒரு பக்கத்தில் கையாடிக் கொண்டிருக்கச் செய்தே அநாதி ஸம்ஸ்காரத்தினால், நிராக்ஷேபமாக உந்நதமாயிருக்கும் தம்முடையதான வைதிக மதத்தில் அபிமானம் ஒருபக்கம் இழுக்கப் புதிது புதிதாக மத நிர்மாணங்கள் தலைபெடுக்கின்றன. இம்மதங்களினுடைய வாழ்வுகளும் இதற்குத் தக்கபடியே தான் குன்றிக் கிடக்கின்றன. ஆனால் இவைகளினால் பரிசுத்தமான வைதிக மதாசாரங்களுக்கு இடையூறுகளும், அடிப்படையான ஸம்ப்ரதாய அர்த்த ஜ்ஞானம் முதலியவற்றில் குலைவுகளும் மாத்திரம் நிச்சயமாய் உண்டாய்விடுகின்றன. ஆனதுபற்றி ஆஸ்திகர்களான விவேகிகள், இம்மதங்களினுடையவும், இவற்றின் ஸஹவாஸத்தால் நம்மவர்க்குண்டாகும் சித்த வ்ருத்திகளுடையவும் ஸாரஸார அம்சங்களைச் சீர்தூக்கிப் பார்த்து வைதிக மதத்தில் ஜீவபூதமாயிருக்கும் நிஷ்டைகளில் தமக்குக் குலைவு வாராதபடி விழித்தவர்களா யிருப்பது கடன். தம்முடையவும் தம்பின்னோர்களுடையவும் தீர்க்கமான ச்ரேயஸ்ஸும் (நன்மையும்) இதைப்பற்றியே இருக்குமென்றும் அறியவேண்டும்.

இப்படியுண்டான சில முக்யமான மதங்களைப் பின்னொருகால் விமர்சிப்போம்.

ஸ்ரீ

# ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமும் ஸ்ரீபாஷ்யகாரரின் உபகாரமும்.

(மஹாவித்வான் பண்டித ரத்நம் ஸ்ரீ. உ. வே. ஸ. ஸ்ரீநிவாஸாசார்யர்.)

## 1. ஸம்ப்ரதாயம்.

ஸ்ரிய:பதியாய் ஸர்வேச்வரனாய் ‘[illegible]’ என்னப்பட்ட பரதேவதையான விஷ்ணுவை யாச்ரயித்திருக்குமவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள். இவர்களுடைய ஸம்ப்ரதாயம் ஸ்ரீவைஷ்ணவ மதமென்னப்படும். இவர்களுடைய அஸாதாரணங்களான அடையாளங்கள் ‘[illegible] ॥’—ஸ்மிருதிரத்நாகரம் - (அர்த்தபஞ்சகங்களின் தத்வங்களை யறிந்தவர்களாயும் பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பெற்றவர்களாயும் மூன்று ஆகாரங்களும் நிறைந்தவர்களாயுமிருப்பவர்கள் மஹாபாகவதரெனப்படுவார்கள். ஹரியின் ரூபத்தை ஹ்ருதயத்திலும் நாமத்தை வாயிலும், வயிற்றில் அவனுக்கு நிவேதனம் செய்த அந்நத்தையும், சிரஸில் அவன் பாத தீர்த்தத்தையும் தரிப்பவன் வைஷ்ணவனெனப் படுவான்) என்பது முதலான ப்ரமாணங்களினால் நிஷ்கர்ஷிக்கப்பட்டன.

வெகுவாய் பூர்வகாலத்திலும் இக்காலத்தில் த்வீபாந்தரங்களிலும் எவரும் தமது இச்சைப்படி எந்த மதத்தையாவது எப்பொழுதாவது அவலம்பிக்கிறதும் விட்டு விடுவதும் உண்டு. இக்காலத்தில் பரதகண்டத்தில் மதமானது ஜந்ம ஸித்தமாயிருக்கிறது. மதாந்தர ப்ரவேசத்தினால் உபயப்ரஷ்டதை (இரண்டிலிருந்தும் விடுபட்டிருத்தல்) உண்டாகிறது; ஆகையால் ஒருவனுக்கு மதமென்பது ஸாதாரணமாய் நிலைத்தேயிருக்கிறது. அநுஷ்டானத்தில் ஏற்றக்குறைவிருந்தாலும் ப்ராம்மண்யம் முதலிய வ்யவஹாரங்களைப்போல், இன்னாருடையது இன்ன மதம் என்னும் வ்யவஹாரத்தில் பாதகமொன்று மில்லாமலிருக்கிறது.

இந்த மதத்தை ஸம்ப்ரதாயமென்றும் வ்யவஹரிப்பார்கள். ஸம்ப்ரதாயமாவது சிஷ்டர்களான பெரியோர்களின் வழியாய் பரம்பரையாய் வந்திருக்கும் உபதேசம். இவ்வித உபதேச ஸித்தமாக வந்த வர்த்தங்களை ஸித்தாந்தமென்றும் சொல்லுவார்கள். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ஸித்தமான ஸித்தாந்தத்துக்கு விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமென்றுபெயர். இது விசுத்தாத்வைத ஸித்தாந்தமென்பதற்கு ப்ரதியோகி (எதிர்மொழி) யாக வ்யவஹரிக்கப்படுகிறது. இந்த நிர்வாஹம் ஸ்ரீவேதார்த்த ஸங்க்ரஹத்தின் வ்யாக்



யானமாகிய ச்ருத தீபிகையில் காணப்படும். ‘[illegible] ।’ (ஸத் ஸம்ப்ரதாயமில்லாத சாஸ்த்ரங்களினால் அர்த்தங்களை நிர்ணயிக்க முடியாது. ஆகையால் ஸதாசார்யருடைய ஸம்ப்ரதாயத்தைக் கைக்கொள்ளவேண்டும்) என்றும், ‘[illegible] ।’ (சாஸ்த்ரமூலமல்லாத ஸம்ப்ரதாயமும் சாஸ்த்ரங்கள் ஒப்புக்கொள்ளாததும் ப்ரமை முதலியவைகளை யுண்டாக்குமாகையால் அவை பௌத்தாதி புறச்சமயங்களுக்கு ஸமானமெனப்பட்டன) என்றும், ‘[illegible] ।’ (வேதங்களுக்கு விரோதமல்லாத தேச ஜாதி குல தர்மங்களே ப்ரமாணங்களாம். கேவலம் இச்சையினால் செய்யப்படுமவைகளில் சாஸ்த்ரமில்லை) என்றும் சொல்லுகிற ப்ரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு நமது ஸம்ப்ரதாயமானது விளங்கி வருகிறது.

## 2. ப்ரவர்த்தகர்கள்

இந்த ஸம்ப்ரதாயத்துக்கு ஸர்வேச்வரனே ப்ரவர்த்தகன். இந்த அம்சம் பின்னால் விசதமாக்கப்படுகிறது. பிற்பாடு வ்யாஸர் போதாயனர் முதலியவர்களின் பரம்பரையால் ப்ரசுரமாயிற்று. போதாயனாசார்யர் வ்ருத்தி என்னும் க்ரந்தத்தை அருளிச்செய்து இந்த ஸம்ப்ரதாயத்தை ப்ரவர்த்தனம் செய்தார் என்பதைப்பற்றி சிலர் எடுத்துவிட்ட ஸம்சயத்தை ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் தத்வடீகை என்னும் க்ரந்தத்தில் பரிஹரித்தருளினார். வ்ருத்தி யென்பது உபவர்ஷரால் செய்யப்பட்டது, போதாயனராலல்ல, என்று ஆக்ஷேபம். இதற்கு ஸ்ரீதேசிகன் தத்வடீகையில் ஸ்போடவாதத்தில், ‘[illegible]’ (வ்ருத்திகாரரான போதாயனருக்கே உபவர்ஷரென்று நாமமாகக்கடவது) என்று ஸமாதானமருளிச்செய்தார். எப்படியும் உபவர்ஷாசார்யருடையவாவது வ்ருத்தி என்னும் க்ரந்தமுண்டென்னும் விஷயத்தில் ஸர்வ ஸம்மதியுண்டு.

அநந்தரம் ப்ரும்மநந்தி ஆசார்யரென்னும் டங்காசார்யர் சாந்தோக்ய உபநிஷத் வ்யாக்யானமான வாக்ய க்ரந்தத்தால் இதை விவரித்தார். இந்த வாக்யத்துக்குத்தான் த்ரமிடாசார்யர் பாஷ்யமருளிச்செய்தது. இந்த பாஷ்ய வாக்யங்களை உதாஹரித்தே ‘[illegible]’ என்னும் க்ரந்தத்தின் கர்த்தாவான ஸர்வஜ்ஞாத்மமுனியும், ‘கல்பதரு’வின் கர்த்தாவான அமலாநந்த ஸர

ஸ்வதியும் அத்வைத ஸித்தாந்தமே டங்க் த்ரமிடாசார்யர்களுக்கும் ஸம்மதமென்று நிரூபித்தார்கள். ஸ்ரீசங்கராசார்யரும் த்ரமிடாசார்யர் பாஷ்யத்தை எடுத்துச் சொல்லி ஸித்தாந்தம் ஸ்தாபித்திருக்கிறார்.

ப்ரும்ம நந்த்யாதிகளுக்குப்பின்பு நமது ஸித்தாந்தத்துக்கு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார். 'ப்ராப்யம் ஜ்ஞானம் ப்ராஹ்மணாத் க்ஷத்ரியாத்வா வைஶ்யாச் சூத்ராதபி நீசாதபீக்ஷ்ணம்।' (பாரதம்—ப்ராம்மண க்ஷத்ரியவைச்ய சூத்ரரிடமிருந்தாவது நீசரிடத்திலிருந்தாவது ஜ்ஞானம் அவச்யம் ஸம்பாதிக்கத்தக்கது) என்றும், 'ஶ்ரத்ததான: ஶுபாம் வித்யாம் ஆததீதாவராதபி। அந்த்யாதபி பரம் தர்மம் ஸ்த்ரீரத்னம் துஷ்குலாதபி। விஷாதப்யம்ருதம் க்ராஹ்யம் பாலாதபி ஸுபாஷிதம்। அமித்ராதபி ஸத்வ்ருத்தம் அமேத்யாதபி காஞ்சனம்॥'—மனு (தமக்குக் கீழ்ப்பட்டவனிடமிருந்துங்கூட வித்யை ச்ரத்தையுடன் ஸம்பாதிக்க வேண்டும். அந்த்யஜாதியனிடமிருந்தேனும் தர்மத்தை அறிவது ச்ரேஷ்டம். துஷ்டகுலத்திலிருந்தாகிலும் உத்தம ஸ்த்ரீயையும், விஷத்திலிருந்தேனும் அம்ருதத்தையும், நல்வார்த்தையை பாலரிடத்திருந்தேனும், நன்னடக்கையை விரோதிபக்கலிலிருந்தேனும், தங்கத்தைப் பரிசுத்தமற்ற வஸ்துவிலிருந்தேனும் க்ரஹிக்க வேண்டியது ஆவச்யகம்) என்றும், இப்படி ப்ரமாண பலங்களாலும் பரம்பரையாலும் நாதமுனிகளுக்கு நம்மாழ்வார் ஆசார்யரானார். இவரைப்பற்ற 'ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம் ஶ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்னா॥' (நமது முதற்குலபதியாகிய வகுள மாலையோடு விளங்குகின்ற நம்மாழ்வாருடைய திருவடித் தாமரைகளிரண்டையும் தலையால் வணங்குகின்றேன்) என்று ஸ்ரீ ஆளவந்தாரருளிச்செய்தார்.

## 3. ஸ்ரீராமாநுஜர்.

ஸ்ரீ ஆளவந்தார் நியமநத்தால் ஸ்ரீபாஷ்யகாரருக்கு அநேகர் ஆசார்யர்களானது ஸம்ப்ரதாயஸ்தர் அறிந்த விஷயம். ஓரிடத்திலேயே ஸகல அர்த்தங்களும் உபதிஷ்டமாகக் கூடுமானாலும், 'தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரஶ்னேன ஸேவயா। உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞானம் ஜ்ஞானினஸ் தத்வதர்ஶின:॥' இப்படி உபதேசிக்கப் பெற்ற ஆத்மவிஷய ஜ்ஞானத்தை நமஸ்காரங்களைச் செய்தும், நன்றாய்க் கேட்டும் சுச்ரூஷை செய்தும் தத்வதர்சிகளான ஞானிகளின் பக்கலில் அடிக்கடி கேட்டுத் தெளியக்கடவாய்; அவர்கள் உனக்கு அபேக்ஷித ஜ்ஞானத்தை உபதேசிப்பார்கள் என்றும், 'பஹுப்ய: ஶ்ரோதவ்யம், பஹுதா ஶ்ரோதவ்யம்', (வெகு பெயர்களிடம் கேட்கவேண்டும் அநேக விதமாகக் கேட்கவேண்டும்) என்றும், 'ஜ்ஞானவ்ருத்தா மயா ராஜந் பஹவ: பர்யுபாஸிதா:।' (ஜ்ஞானாதிகர்களனேகரை நான் அடுத்



தேன்) என்றும், சொல்லப்பட்ட ந்யாயங்களால் பஹுமுகமாக சிக்ஷைபெற வேண்டியது அவச்யமாகிறது. இதனால் கூபகூர்ம (கிணற்று ஆமை) ந்யாயத்தால் வரும் க்ருஹீத க்ராஹித்வாதி (பிடித்ததில் பிடிவாதம் முதலிய) தோஷங்கள் நீங்கி புத்திக்கு வைசால்யமும் ஔதார்யமுமுண்டாம். ப்ரதானமல்லாத விஷயங்களில் அனுவச்யகமான ஆதரவு உண்டாகாது. மனதுக்கு சாந்தியும் லபிக்கும். 'ஶமார்த்தம் ஸர்வஶாஸ்த்ராணி விஹிதானி மனீஷிபி:' (எல்லா சாஸ்த்ரங்களும் மனதுக்கு சாந்தியை கொடுக்கும் பொருட்டே ஹிதைஷிகளான பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டன) என்று சொல்லப்பட்ட சாஸ்த்ரங்கள் ப்ரயோஜனமுள்ளவைகளாகின்றன.

## 4. ஸ்ரீபாஷ்யகாரரின் ஔதார்யம்.

இப்படி பஹுமுகமான ஜ்ஞானஸம்பாதநத்தினால் சித்த வ்ருத்தி உதாரமாக ப்ரவ்ருத்திப்பதை ஸ்ரீபாஷ்யகாரர் தம்மநுஷ்டாநங்களினால் நிரூபித்தருளினார். அவர் ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்ததும், 'அபயம் ஸர்வபூதேப்யோ மத்த:' (ஸர்வபூதங்களுக்கும் என்னிடத்திலிருந்து அபயம் உண்டாகட்டும்) 'ருஷீணாம் அபயம் தத்தம் க்ருதக்ஷேமாஶ்ச தண்டகா:' (ரிஷிகளுக்கு அபயம் கொடுக்கப்பப்பட்டது, தண்டகாரண்யத்துக்கு க்ஷேமமும் செய்யப்பட்டது), 'அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம' (எல்லா ஜீவர்களின் பொருட்டும் அபயம் கொடுக்கிறேன். இது என் வ்ரதம்), என்பது முதலான ரஹஸ்யங்களின் உட்கருத்தை யடியொத்தித் தன் ஔதார்யகுணத்துக்குப் போக்குவீடாக ஸர்வலோக ஹிதார்த்தமாகச் செய்தபடி. 'அயம் நிஜ: பரோவேதி கணனா லகுசேதஸாம்। உதாரசரிதானாம் து வஸுதைவ குடும்பகம்॥' (அற்ப புத்தியுடையவர்கள் இவன் நம்முடையவன் இவன் அயலான் என்று கணக்கிடுவார்கள். உதாரமான நடவடிக்கையுடையவர்களுக்கோ வென்றால் உலகமே தமது குடும்பமாகிறது) என்னும் கணக்கிலன்றோ பெரியோர்களுடைய அநுஷ்டாநங்களிருப்பது! ஸ்ரீகீதாசார்யனும் இவ்வர்த்தத்தையே 'ந மே பார்த்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சன। நானவாப்தம் அவாப்தவ்யம் வர்த்த ஏவ ச கர்மணி॥' (ஹே பார்த்த! மூன்று லோகங்களிலும் எனக்குச் செய்யவேண்டுவதாவது, கிடைக்காததாவது, கிடைக்கவேணடியதாவது ஒன்றுமில்லை; எனினும் நான் கர்ம மார்க்கத்திலேயே நிற்கிறேன்) என்று இந்த தர்மத்தையே அருளிச்செய்தார். ரஹஸ்ய சாஸ்த்ரங்களிலும், 'சராசராணி பூதானி ஸர்வாணி பகவத் வபு:। அதஸ் தத் ஆனுகூல்யம் மே கார்யம் இத்யேவ நிஶ்சய:॥ ஆனுகூல்யஸ்ய ஸங்கல்ப:' (சராசரங்களான பூதங்களனைத்தும் பகவானு

டைய சரீரமே; ஆகையால் அவைகளுக்கு நன்மைசெய்ய வேண்டுமென்பதே எனது தீர்மானம், என்பது ஆநுகூல்ய ஸங்கல்பம்) என்று உபதேசிக்கபபட்டது. இப்படியல்லாமல் ஸ்வப்ரயோஜநத்துக்காகவே ஸர்வ ஸங்க பரித்யாகம் செய்தவர்கள் ஸந்யாஸிகளாகும் பக்ஷத்தில் இவர்களுக்கும் பசு பக்ஷி முதலியவைகளுக்கும் வாசி யிராது. இந்த விஷயத்தை பாரதம் சாந்தி பர்வத்தில் ராஜதர்மத்தில் தர்மராஜனைக்குறித்துச் செய்யப்படும் உபதேசங்களில் விஸ்தாரமாகக் காணலாம்.

## 5. ஸ்வார்த்த பரித்யாகம் (தந்நலம் விடுகை).

பரஹிதத்தின் பொருட்டுத் தன்னலத்தை த்யாகம் செய்யும் ப்ரகாரங்கள் நமது நாட்டில் அநேகமாக உள்ளது. ஸ்ரீவேத வ்யாஸமஹர்ஷி லோக ஹிதார்த்தமாகவே அவதரித்தார் என்பது இதிஹாஸஸமுச்சயத்தில் விவரிக்கப் பட்டிருக்கிறது. 'ப்ராயசோ முநயோ லோகே ஸ்வார்த்தைகாந்தோதிதேஹிதா: | த்வைபாயநஸ்து பகவாந் ஸர்வபூதஹிதே ரத: || ச்ரூயதாம் ஸிம்ஹநாதோऽயம் ருஷேஸ்தஸ்ய மஹாத்மந: | ஸர்வே தரந்து துர்காணி ஸர்வே பத்ராணி பச்யந்து | ஊர்த்வபாஹுர் ப்ரவீம்யேஷ ந ச கச்சிச் ச்ருணோதி மே ||' (ஸாதாரணமாய் ரிஷிகளெல்லாம் கேவலம் தங்கள் ஹிதத்தின் பொருட்டே ப்ரயத்நப்படுகிறவர்கள். த்வைபாயன (வ்யாஸ) பகவானேவென்றால் ஸர்வபூதங்களினுடையவும் நன்மையையே நாடுகிறவர். மஹாத்மாவான அந்த ரிஷியின் ஸிம்ஹநாதத்தைக் கேளுங்கள்! 'எல்லோரும் தங்கள் இடையூறுகளைக் கடக்கட்டும்! எல்லோரும் க்ஷேமங்களை யடையட்டும்!' என்றல்லவோ கூவுகின்றார்! கைதூக்கிக் கதறிச்சொல்லுகிறேன்! என் பேச்சைக் கேட்பாரைக்காணேம்!) என்று அங்கு சொல்லப்பட்டது. ஸர்வ பூதங்களுக்கும் ஸுஹ்ருத்தான (அன்பனான) பகவானே சில விசேஷ வ்யக்திகளான மனுஷ்யரிடத்திலும் தேவர்களிடத்திலும் அநுப்ரவேசித்து மனுஷ்ய நடவடிக்கைகளை நடத்தி தர்மபரிபாலநம் பண்ணுவதும் அதன் பொருட்டு துஷ்டநிக்ரஹம் செய்வதும், 'ப்ரஹ்வோ ஜ்யேஷ்டா ஸ்துதேஷு ந்ருதேவாதிஷ்டா வாபுஹம் | கநாவ்யவிச்ய யஜ்ஞஸ்ய கரோதி பரிபாலநம் || யஸ்ய யஸ்யாவதாரஸ்து கார்யார்த்தம் துஷ்டநிபர்ஹணம் | ஹிதம் ஸாதூநாம் ஸர்வம் ஜாநீஷ்வ ஸத்க்ருதம் ||' என்ற பகவத் வசநங்களினாலே ஸித்தம்.

மஹான்களுடைய அபிப்ராயங்கள் இவ்விதமாகவேதானிருக்கும். ஸ்ரீ பாகவதத்தில் ரந்திதேவர் சொல்லுவது—'ந காமயேऽஹம் கதிமீச்வராத்பராமஷ்டர்த்தியுக்தாமபுநர்ப்பவம் வா | ஆர்த்திம் ப்ரபத்யேऽகிலதேஹபாஜாமந்த:ஸ்திதோ யேந பவந்த்யது:கா: ||' (ஈச்வரர்களுடைய பதவியையும் நான் வேண்டவில்லை; அஷ்ட ஐச்வர்யங்களோடுகூடிய மீட்சியில்லா வாழ்ச்சி' யென்னும் பெரும்பதத்தையும் நாம் அபேக்ஷிக்கவில்லை' ஆனால் எல்லா பூதங்களினுடையவும் அந்தராத்மாவாக விருந்து அவர்கள் துக்கமில்லாம லிருக்கும்பொருட்டு அவர்களுடைய கஷ்டங்களை நானே யடையும்படி வேண்டுகின்றேன்) என்று. அப்படியே புத்தரும் 'கலிகலுஷக்ருதாநி யாநி லோகே மயி நிபதந்து விமுச்யதாம் ஹி லோக: |' (கலியினால் லோகத்தில் விளையும் கொடுமைகளெல்லாம் என்மேல் விழட்டும்; உலகம் முக்தியை யடையட்டும்) என்று பேசினதை தந்த்ரவார்த்திகமென்னும் க்ரந்தத்தில் குமாரிளபட்டாசார்யர் எடுத்திருக்கிறார். புத்தமதம் நமக்கு பாஹ்யமேயாகிலும் இந்த ஔதார்யகுணம் நிரம்பிய வசநத்தை நாம் அங்கீகரிக்கத் தட்டில்லை.



ஸ்ரீ பாஷ்யகாரரும் ஆசார்யர் கட்டளையை மீறி த்வயத்தை பஹிரங்கமாக ப்ரவசநம் செய்தது, தாம் நரகமடைந்தாலும் பஹுஜநங்கள் கடைத்தேறட்டும் என்னும் அபார காருண்யத்தால், என்ற ஐதிஹ்யம் ப்ரஸித்தம். இந்த ப்ரவாதத்தில் ஏதாவது விப்ரதிபத்தி யுண்டானாலும், இதினால் பெரியோர்களுடைய அபிஸந்தி எப்படி யிருக்குமென்பதை அறியக் குறையில்லை. மேலும், 'ராமாநுஜஸ்ய ஸதஸி யதீநாம் சதாநி ஸப்த ஸப்ததிரபி ஸப்தசத: | ஏகாந்திநாம் து ஸாத்ரஸம்மி ஸஹஸ்ரமேவம் ஸ்ரீரங்க ஸத்மநி யதிஸார்வபௌமா: ||' (யதிசக்ரவர்த்தியான ஸ்ரீ ராமாநுஜர் 700 - யதிகளுடனும், 74 - ஸிம்மாஸநாதிபதிகளுடனும், 12000 - பரமைகாந்திகளான ஸ்ரீ வைஷ்ணவர்களுடனும் எப்போதும் கூடினவராய் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்தார்) என்னும் வ்ருத்தாந்தத்தினால், இவருடைய அஸாதாரணமான ஸங்கிரண (ஒரு கூட்டமாய்ச் சேர்க்கும்) ஸ்வபாவமும், ஸர்வபூத ஸௌஹார்த்தமும், இவரிடத்தில் பஹுஜநங்களுடைய ப்ரீதியும் தெரியவருகிறது. இங்கு சொல்லப்படும் கணக்குகளில் ஏற்றக்குறைவுகளிருந்தாலும், ஸ்ரீ உடையவரின் ஸ்வபாவம் விசதமாகிறது. இப்படியே இப்பொழுதும் ராமாநுஜக் கூட்டங்களென்னும் வ்யவஹாரம் ப்ரஸித்தமாய் விளங்கிவருகிறது. 'அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்ய |' (தரம் பாராமல் ஸர்வ லோகத்துக்கும் சரண்யனா யிருப்பவனே) என்னப்பட்ட ஈச்வரனுடைய ஸங்கல்பத்துக்குத் தாமும் ஸஹாயமாயிருந்து, ஸ்ரீ பாஷ்யகாரர் அங்கங்கே விரளமாயிருந்த பலவித ஸம்ப்ரதாயங்களையும் ஆசார்யபுருஷர்களையும் அவர்கள் சிஷ்யர்களான ஸகல ஜநங்களையும் திரட்டி ஒன்றுசேர்த்து ஸம்ப்ரதாயத்தை அபிவ்ருத்திசெய்தார்.

இவர் முக்யமாகத் திருவுள்ளம் பற்றின பகவத் பக்தியானது அநேக தாரதம்யங்களை யுடையதா யிருந்தாலும் எல்லோரும் தங்கள் தங்கள் அதி

காரத்துக்குத் தக்கப்படி யநுஷ்டித்து க்ருதார்த்தர்களாக வேண்டுமென்பதே அவருடைய அபிப்பிராயம். மேலும் இவர் விசேஷமாக ப்ரபத்தி மார்க்கத்தை வெளியிட்டருளினதும் ப்ரஸித்தம். பக்தியும் ப்ரபத்தியும் ஸூக்ஷ்ம த்ருஷ்டியாலும் ஸ்தூல த்ருஷ்டியாலும் ஒன்றுக்கொன்று ஸங்கதமாகவே இருக்கிறபடியால் பக்திசாஸ்த்ர மென்றாலும், ப்ரபத்திசாஸ்த்ர மென்றாலும் ஒன்றேயாயிருக்கும். இந்த சாஸ்த்ரத்துக்கு முக்கியமான ஆலம்பநம் (ஆதாரம்) திவ்யதேசங்களே. அவைகளில் அதிக ஆதரத்துடன் ஸ்ரீபாஷ்யகாரர் மங்களாசாஸநம் செய்தருளினர். இம்மங்களாசாஸனம் மாலாகரணம் தீபாரோபணம் ஸந்நிதி விளக்குதல் முதலிய கைங்கர்யங்களில் அவரவர்கள் சக்திக்குத் தக்கப்படி அந்வயிப்பதிலும் பக்தி அநுஷ்டானம் நிரூபிக்கப்பட்டது.

## 6. ஸித்தாந்த ப்ரவசநம்.

ஸ்ரீ பாஷ்யகாரர் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைப் புதியதாய்க் கற்பித்தாரா? அல்லது ஏற்கனவேயிருந்து அவிசதமாயிருந்ததை ப்ரகாசமாக்கினரா? என்றுசிலருக்கு ஸந்தேஹமுண்டாகிறது. ஆனால் அவர் புதியதாய் ஒன்றையும் உண்டாக்கவில்லை. இது ப்ராசீன ஸித்தாந்தம். வேதம் முழுவதும் ஒருசாஸ்த்ரமென்பது இந்த ஸித்தாந்தத்தின் ப்ரதானமான கொள்கை. வேதத்தின் கர்மபாகத்துக்கும் ஜ்ஞாநகாண்டத்துக்கும் வெளிப்படையான ஸம்பந்தமிருந்தால் வாதிகள் இவ்விஷயத்தில் பலவிதமாய் விகல்பிக்க இடமிராது. ஆனது பற்றியே நமது ஸம்ப்ரதாயத்தில் இரண்டு காண்டங்களுக்கும் சொல்லப்படும் ஸம்பந்தம் ஸாங்கேதிகமே (கட்டுப்பட்டே) யல்லாமல் ஸ்வாபாவிகமான ஸம்பந்தமில்லையென்று ஸாமான்ய ஜநங்கள் சொல்லுகிறார்கள். ஈச்வராபிப்ராய ரூபமாகிய இந்த இரண்டு பாகங்களுள்ள வேதத்துக்கு வ்யாக்யான ரூபங்களான பூர்வ மீமாம்ஸா உத்தரமீமாம்ஸா சாஸ்த்ரங்கள் ஜைமினி ஆசார்யராலும் பாதராயணாசார்யராலும் முறையே செய்யப்பட்டனவென்று நமதுஸம்ப்ரதாயம் ஸித்தித்ரயத்திலும் ஸ்ரீபாஷ்யத்திலும் ஸ்பஷ்டமாக நிரூபிக்கப்பட்டது. இப்படி வேதம் முழுவதும் ஒரேசாஸ்த்ரமென்னும் பக்ஷத்தை அத்வைதியான வாசஸ்பதிமிச்ரரும் பாமதி என்னும் தமது க்ரந்தத்தில் ஸூசிப்பித்திருக்கிறார்.

ஆனால் ஸ்ரீசங்கராசார்யர் தமது க்ரந்தங்களிலெங்கும் பாதராயணர் ப்ரும்மஸூத்ரகர்த்தா வென்று சொல்லக்காணப்படவில்லை. பாதராயணபதத்தின் வ்யாக்யானங்களிலும் ஸூசிப்பிக்கவில்லை. மேலும் 'ஸாக ஜ்ஞ நஃ ஸஶீரெர ஹாவாக' என்னும் ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் ஜைமினியே ப்ரும்மஸூத்ரத்தைச் செய்தவர் என்கிற அபிப்ராயம் வரும்படி எழுதியிருக்கிறார். இதற்கநுகுணமாக உபவர்ஷாசார்யரையும், சபரஸ்வாமியையும் குறிப்பிட்டிருக்கிறார். இதனால் ஜைமினியே பூர்வ, உத்தரங்களாகிய இரண்டு மீமாம்ஸா ஸூத்ரங்களையும் செய்தவர் என்று ஒரு ஸம்ப்ரதாய மிருந்ததாகத் தெரியவருகிறது. ஸ்ரீசங்கரரின் நேர் சிஷ்யரான ஸுரேச்வராசார்யருடைய நைஷ்கர்ம்யஸித்தி என்னும் க்ரந்தத்தில் ஜைமினியே ப்ரும்மஸூத்ர கர்த்தாவென்று ஸ்பஷ்டமாகச்சொல்லப்பட்டிருக்கிறது.



இதற்கு அநுகுணமாகவே த்ரமிடபாஷ்யகாரரும் ஜைமினிக்கு நமஸ்காரம் செய்திருப்பதும் பாதராயணருக்குச் செய்யாதொழிந்ததும் காரணமாக, இவ்வித வேறு அபிப்ராயத்துக்கு இடம் ஏற்படுகிறது. இந்த பாஷ்ய பஞ்சிகா ச்ருதப்ரகாசிகையின் ஆரம்பத்தில் 'நமஃ வேதவ்யாஸ முநயே காஷ்யாய' என்று தொடங்கி ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிறது. பின்னும் ஸூத்ரங்களிலேயே 'ஜைமினி சொன்னார்' 'பாதராயணர் அபிப்ராயப்படுகிறார்', என்று வசநங்களும் காணப்படுகின்றன.

இதெல்லாவற்றையும் ஆவாபோத்வாபம் (சேர்க்கத்தக்கதைச் சேர்த்தல் விடத்தக்கதை விடுதல் என்றபடி) செய்து ஆலோசித்தால் சிஷ்யப்ரசிஷ்ய பரம்பரையில் ஒருவர் செய்த க்ரந்தம் மற்றவர் பெயரால் வழங்கலாமென்று நிர்வஹிக்கக் கூடுமாதலால், ஸூத்ரகர்த்தா ஜைமினி அல்லது பாதராயணர் என்னும் பக்ஷங்கள் உபந்நங்களாகும்.

சாஸ்த்ர கர்த்தாக்களைப் பற்றிய விசாரம் எப்படியாவதிருக்கட்டும். வேதத்தின் இரண்டு பாகங்களும் சேர்ந்து ஒரே சாஸ்த்ரமாகின்றது என்னும் ப்ராசீன ஸம்ப்ரதாயத்தை நிலை நிருத்தினது ஸ்ரீபாஷ்யகாரர் செய்தருளிய ப்ரவசநத்தில் முக்கியமான அம்சம்.

(இன்னும் வரும்)

ஸ்ரீ:

## "குருபரம்பரைகளின் விமர்ச" சோதனம்.

(ஸ்ரீ. உ. வே. விளாகம் ரா. நரஸிம்மாசார்யர்.)

தத்வ ஹித புருஷார்த்த விஷயமாக ஜ்ஞாதவ்யாம்சங்களைப்பற்றி, ஆப்ததமர்களான ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த நிர்வாஹக பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளில் விசேஷ அபிருசியையும், அம்மஹான்களிடம் பக்தியையும் லௌகிக ஜனங்களுக்கு உண்டுபண்ணுவதையே பகவன்முகோல்லாஸ நித்ய காலக்ஷேபமாகவுடைய ஆதுனிக மஹோபகாரிகளில் ஸுப்ரஸித்தரான உ. வே-ஸ்ரீ பண்டிதபூஷணம் சேட்லூர் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமிகளால், கார்த்திகைமாஸத்திய தீபிகையில், "குருபரம்பரைகளின் விமர்சம்" எனும் ஓர் வ்யாஸத்தில், ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபனாசார்ய ரத்னமாலையின் நடுநாயகமான

ஸ்ரீபகவத்ராமானுஜனே, ஸ்ரீஅனந்தனாகிய நித்யஸூரியின் அம்சாவதாரமாக விச்வஸித்திருக்கும் உலகத்தார் கொள்கைக்கு மூலகாரணங்களான ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய குருபரம்பரைகளின் வசனங்கள் நல்ல ப்ரமாணவலிமையுடையவைகளா என்கிற விஷயம் விசாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த விசாரத்தின் தீர்மானம் என்னவெனில், ஸ்ரீராமானுஜன் சேஷாவதாரரெனும் கொள்கை ஆப்த ப்ரமாணங்களுக்கு விரோதமுடையதென்றும், அபஸித்தாந்தமெனும் தோஷத்திற்கு உள்ளானதென்றும், மிகவும் அஸங்கத மென்றுமே.

ஆப்தப்ரமாணங்களுக்கு விரோதியென்றது எப்படியெனில், பூர்வாசார்யாக ளெல்லோரிலும், எம்பெருமானார் புகழை மிகச்சிறப்புடன் பாடிக் கொண்டாடியிருக்கும் ஆப்தர்களில் முக்யர்களான திருவரங்கத்தமுதனாரும் ஸ்ரீநிகமாந்ததேசிகனும் தங்களுடைய ஸ்ரீஸூக்திகளில், முக்யமாய் இராமானுச நூற்றந்தாதியிலும் ஸ்ரீயதிராஜஸப்ததி யெனும் ஸ்தோத்ரத்திலும், ஸ்ரீராமானுஜனை சேஷாவதாரராக ஓரிடத்திலாவது ப்ரசம்ஸிபாததுடன், ஸ்ரீபஞ்சாயுதங்களின் அவதாரமாகவே வர்ணித்திருக்கிறபடியால்; சேஷாவதாரரென்கிற உலகக்கொள்கையும், அக்கொள்கைக்கு மூலமான குருபரம்பராக்ரந்த வசனங்களும் அப்ராமாணிகங்களென்று, ப்ரமாணங்களின் தாரதரங்களை விமர்சிக்கும் ஆஸ்திகர் நிச்சயிக்கவேண்டு மென்பதே. ஆனால், இதை நாம் அங்கீகரிக்குமுன் இவ்விஷயங்களை ஆலோசிக்கவேண்டும்.

(1) இவ்வளவு நிபாயமுடையதாய் இப்போது செய்யப்படும் தீர்மானத்தை, எம்பெருமானார் காலமுதல் இதுவரையிலு முள்ள ஆஸ்திகசிகாமணிகளில் ஒருவராவது ஏற்கனவே செவ்வனே செய்திருக்கக்கூடாதா ?

(2) அப்படிச் செய்வதற்குத் தகுந்த புத்திக் கூர்மையும், ஸ்ரீஅமுதனார் ஸ்ரீதேசிகன் வசனங்களில் ஆதரமும் ஒருவருக்காவது இல்லாமற்போய் விட்டதா ?

(3) பண்டிதர்களும் பாமரர்களும் நிராக்ஷேபமாக ஏன் இப்படி ஒருமித்து ஸ்ரீராமானுஜன் ஸ்ரீபஞ்சாயுதாவதாரராகக் கொண்டாடுவதை நினையாமல், சேஷாவதாரர் என்றே ஏன் உத்கோஷிக்கவேண்டும். ?

(4) இந்த உத்கோஷத்திற்கு முக்ய போஷகர்களான குருபரம்பரா க்ரந்த கர்த்தாக்களெல்லாரும், வாசியின்றி, பஞ்சாயுதாவதாரப் பேச்சையே எடுக்காமல், சேஷாவதாரரென்பதையே ஏன் வற்புறுத்திச் சொன்னார்கள் ?

(5) இப்போது 'விமர்சத்தில்' காட்டப்படும் பிசகு ஒன்றைப்போல், வேறு பிசகுகளும் இருந்திருக்கக்கூடுமானதால், ஆழ்வாராசார்யர்களின் வைப



வ ப்ரகடனங்களினால் நமக்கு ஸத்ஸம்ப்ரதாயத்தில் விசேஷ ச்ரத்தையை உண்டுபண்ணின மஹோபகாரிகள் என்று இக்குருபரம்பரைகளின் வக்தாக்களை நாம் இதுவரையில் கௌரவித்து வந்த தெல்லாம் வீணே யாகுமே ?

(6) இராமானுஜன் பஞ்சாயுதாவதாரரானாலும், சேஷாவதாரரானாலும், ஸர்வநித்யஸூரிகளின் ஸமுச்சயாவதாரரானாலும், ஒருநித்யஸூரியின் அவதாரமென்று ஒருவரும் சொல்லாமற்போயினும், பரமாஸ்திகரான பண்டித ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ,ஸ்ரீராமானுஜன் திருவடிகளில் ஏற்கனவே யுள்ள பக்திப்ரகர்ஷத்தைக் குறைக்க முடியாது. ஆனாலும் உலகமுழுவதிலும் வெகுகாலமாய் மிக்க உறுதியுடன் வேரூன்றிக்கிடக்கும் இவ்விராமானுஜ சேஷாசத்வப்ரதிபத்தியை அப்ராமாணிக மென்றும், அதற்கு மூலம் அமுதனாரும் தேசிகனுமாகிய பூர்வாசார்ய ஸார்வபௌமருடைய ஸ்ரீஸூக்திகளே யென்றும், இப்போது பெரியோர்கள் அறுதியிட்டால், இதினால் நன்மை விளைந்தாலும் விளையாமற்போனாலும், பெருந்தீங்கு ஒன்றுமாத்திரம் ஸம்பவிப்பது நிச்சயம். என்னவெனில், சாஸ்த்ரீய சிக்ஷையில்லாதவர்களாயும், எம்பெருமானார் திருநாம வைபவாதிகளை கதாநுகதிகமாய்க் கொண்டாடுமவர்களாயும், ஸ்ரீவைஷ்ணவ மதக்கொள்கைகளில் சிறியதும் பெரியதுமான அம்சங்களில் வாசியறத் தங்கள் மனத்தில் பிறரால் நாடோடியாய்ப் புகுவிக்கப்பட்ட அம்சங்களை மாத்திரம் எளிதில் விடமாட்டாத பிடிப்புடையவர்களாயும், பற்பல வர்ணத்தாருமான எண்ணிறந்த ராமானுஜீய வைஷ்ணவர்களில் பெரும்பாலோர்க்கு, ராமானுஜன் சேஷாவதாரர் என்ற ஓர் விசேஷத்தைக் காட்டிலும் உயர்ந்த விஷயம் அவர்கள் படித்த படிப்பில் அகப்படாது. இப்படி வேரூன்றிக் கிடக்கும் உலக நம்பிக்கையை சுத்த தப்பிதமான நம்பிக்கை, அதை எல்லோரும் விட்டுவிடவேண்டு மென்னும் உபதேசம் நிறைவேறாமல் போவதுடன், அமுதனாரும் தேசிகனும் ஆப்தர்களாய் மதிக்கப்படுவதை இழந்து, அவர்கள் மனக்கண்ணுக்குக் குற்றவாளிகளாகவும் புலப்படுவார்கள்.

இந்த ஆறு காரணங்களாலும், இவைகளிலும் 6-வதான அதர்த்தத்தின் பயத்தாலும், சேஷாவதாரத்வ " விமர்ச " த்தை விசேஷ ஜாக்ரதையுடன் சோதிக்கவேண்டியது அவசியமாகிறது.

ஸ்ரீராமானுஜன் சேஷாவதாரரல்ல ஸ்ரீபஞ்சாயுதாவதாரரே என்ற தீர்மானத்திற்கு ப்ரமாணமாகக் காட்டப்பட்டது எதுவெனில், ஸ்ரீராமானுஜ ப்ர

சிஷ்யராயும் கூரத்தாழ்வான் திருவடிகளுமான திருவரங்கத்தமுதனார் * அருளிச்செய்த இராமானுச நூற்றந்தாதியின் -௩௩—வது பாசுரமும் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த யதிராஜ ஸப்ததியின் ௧௨—வது ஶ்லோகமும். இவையென்ன பொருளை விரிக்கின்றனவென்றால், திருமாலடிமைக்குப் புறம்பான கொள்கைகளையுடைய வாதிகளைச் சிதைப்பதில் தீக்ஷ்ணத்தன்மையும் அடியார்களைக் காக்கும் வண்மையும் நிறைந்த இராமானுசமுனியையும், துஷ்டநிக்ரஹபூர்வக சிஷ்டபரிபாலன ரூப பகவத்கைங்கர்யத்தி லிழிந்த ஸ்ரீபஞ்சாயுதங்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால், அந்த ஸ்ரீபஞ்சாயுதங்களே இவ்விராமானுசனுருவாய் இவ்வுலகி லமைந்து விளங்கினரோ வென்று புகழப்பட்டிருப்பதே யாம். இப்படிப் புகழ் பாடியிருப்பதுடன், இவ்விதமாகவே ஸ்ரீஅனந்தாழ்வானை ஒருபாசுரத்திலாவது ஶ்லோகத்திலாவது அமுதனாரும் தேசிகனும் உபமானமாக எடுக்காத காரணத்தாலேயே, இவ்விரு ஆசார்ய ஸார்வபௌமர்களையும் ஸ்ரீராமானுஜ சேஷாவதாரத்வத்தை ஒப்புக்கொள்ளாதவர்களாகவே முடிவு கட்டி விடலாமா வென்றும், இப்படி முடிவு கட்டி விட்டால் இவர்கள் திருவடிகளில் மிகப்ரவணராய் அபிப்ரவஸித்தர்களாய் இதுவரையில் தோற்றின பூர்வாசார்யர்கள், எப்படி இவ்விருவரின் திருவுள்ளத்திற்கு இசையாத கொள்கையைக் கொண்டிருந்தார்க ளென்பதையும் நன்றாய் ஆலோசிக்கும்பக்ஷத்தில், பின்வருமாறு யோஜனைசெய்வது ந்யாயமாகும். எப்படியெனில்:—

ஸ்ரீபாஷ்யகாரர் இன்ன நித்யஸூரியின் அவதாரமென்ற நிஷ்கர்ஷத்தை வெளியிடுவதற்காகவந்த பாசுரங்களாவது ஶ்லோகங்களாவது அமுதனார் ப்ரபந்தத்திலும் தேசிகன் யதிராஜஸப்ததியிலும் கிடைக்கவேமாட்டா. கீழ்க் குறிப்பிடப்பட்ட நூற்றந்தாதி ௩௩.-வது பாசுரமும் ஸப்ததியின் ௧௨-வது ச்லோகமும் ஸ்ரீராமானுஜன் இன்னாருடைய அம்சாவதாரமே யென்று குறிப்பிடவந்தபாசுரமும் ஶ்லோகமு மல்ல வென்று இவைகளுடையவும், இவைகளுக்கு முன்னும் பின்னுமுள்ள பாசுரங்களுடையவும் ச்லோகங்களுடையவும் நடைகளையும் பொருள்களையும் நன்குணர்ந்து பராமர்சிப்பவர்க்குப் புலப்படும். யதிராஜ ஸபத்தியில், ஸ்ரீபாஷ்யகாரருடைய திவ்யாத்மகுணங்களிலும், பரமபுருஷன் திருவுள்ளத்தை அடியொத்தின சாஸ்த்ரங்களின் உட்பொருளைத் தெளிவுறச் சிந்தையுளிருத்தும் திறமையிலும் மிகவும் ஈடுபட்டு, அவ்விதமான ஈடுபாட்டிலும் முக்யமாய் விரோதிநிரஸன பூர்வமாக ஸ்வாச்ரித ஜனரக்ஷண மஹோபகாரங்களைப் பற்பல விதமாய்க் கொண்டாடப்புகும்போது, ஒரு ச்லோகத்தால் எம்பெருமான் திருவுள்ளத்திற் கிசைந்தபடி, துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்யும் ஸ்ரீ பஞ்சாயுதர்களின் வேறுருவாகவும், மற்றும் சில ச்லோகங்களினால் ராமன் பின் பிறந்தா (ராமாவரஜ ஃ) னாகும் கண்ணனுடைய வேறோரவதாரமாகவும் (யதிராஜஸப்ததி-௧௩), ஆசார்யபங்க்தியாகிய ரத்னமாலையின் நடுநாயக ரத்னமாகவும் (ஸப்ததி-௧௫-), பரமைகாந்தி ஸார்வபௌமர்களாகிய முத்துக்கள் நிறைந்த மூங்கில்களையுடைய பர்வதமாகவும் (ஸப்த-௧௯.), நிலை யொன்றி, நிற்க கில்லா மனத்தை நிலை நிறுத்தும் அற்புதமான ஓர் மருந்தாகவும் (ஸ்ப்த-௨௦-), திருமாலடியார் உள்ளமாகும் தெள்ளிய நீர்நிறைந்த தடாகத்தில் களிப்புற்று வாழும் ராஜஹம்ஸமாகவும் (ஸப்-௨௨.-) கருடத்வஜனுடைய த்யானத்துடன் கூடிய மஹாமந்த்ரோச்சாரண வலிமையினாலே ஸம்ஸாரமாகும் ஸர்ப்பத்தினால் கடிபட்டுப்புலன்கள் ஒன்றும் போகங்களிலேயே மண்டும் மனமுடைமையாகும் மயக்கத்தையுடைய ஸம்ஸாரிகளின் பெரு மூர்ச்சையைப் போக்கடிக்கும் திறமையையுடைய ஓர் அற்புதனான பாம்புப் பிடாரனாகவும் (ஸப்-௨௩); அடியார் மனமாகும் படத்தில் விசித்ரமாய் விஜ்ஞான சித்ரமெழுதும் ஓர் அற்புத சித்திரவேலைக்காரனாகவும் (ஸப்-௨௪.), வித்யைகளாகிய ஆறுகளுக்கெல்லாம் உத்பத்தி ஸ்தானமாகிய ஓர் பெரிய மலையாகவும், ஸம்ஸாரமார்க்கத்தில் திரும்பத் திரும்ப அலைந்து, அலுப்படைந்து களைந்துப்போனவற்குத் தன் நிழலாலும் பழங்களாலும் களைப்பாற்றுவிக்கும் ஓர் பெரிய நிழல்தரு மரமாகவும் (ஸப்-௨௮) த்ரிதண்டமாக மாறின பிரம்புடன் கூடின ஸ்ரீவிஷ்வக்ஸேனராகவும் (ஸப்-௩௨), பீதாம்பரத்தைக் காஷாயமாக உடுத்துக் கௌமோதகீயெனும் தண்டையே த்ரிதண்டமாகக் கையிலேந்தின ஸ்ரீமுராரியின் மற்றோருருவாகவும் (ஸப்-௬௩-) ஸ்ரீ உடையவர் புகழப்படுகிறார். அப்படியே ராமாநுஜ நூற்றந்தாதியிலும் ஆச்ரிதர்களுக்கு கல்பவருக்ஷமாகவும் (பா-௫௩) 'சாஸ்திரங்களின் உண்மைப் பொருள்களாகிய மழையை உலகினில் பொழிந்திடும் மேகமாவும் பா-௫௫-), ஸ்ரீ நம்மாழ்வாரின் பசுந்தமிழானந்தம் பாய் மதம் பெருக்கும் மதயானையாகவும் பா-௬௭-), ஸ்ரீயதிராஜன் உத்ப்ரேக்ஷிக்கப்படுகிறார். இப்படிப் பலவிதமாய் உபகாரஸ்மரணபூர்வக குணானுபவ ரஸப்ரவாஹங்களா யமைந்த ஶ்லோகங்களும் பாசுரங்களும் காணப்படுகின்றனவே யன்றி, அவதாரத்திற்கு மூலமான நித்யஸூரி வ்யக்தி நிஷ்கர்ஷம் செய்யும் குறிப்புடைய பாசுரமாவது ஶ்லோகமாவது கிடைக்காது. ஐதம்பர்யமாக

* ஸ்ரீகுருபரம்பராஸாரத்தில் ஸ்ரீதேசிகனால், பெரியநம்பிகள் திருவடிகளாயும் எம்பெருமானாருடைய ஸதீர்த்யராயும் குறிப்பிடப்பட்ட அணியரங்கத் தமுதனாரை இராமானுச நூற்றந்தாதிக்கு வக்தாவாக 'விமர்ச' த்தில் வரைந்திருப்பது ஸம்ப்ரதாய கதிக்குப் பொருந்தவில்லை. "வஞ்சமுக்குறும்பாம் குழியைக்கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடிய பின்" அவ்வாழ்வான் பக்கல் ஆசார்யபக்தியைத் தெளிந்து, உடையவர் ஆழ்வாரைக் கோயிலில் திருப்ரதிஷ்டை செய்விக்கும் ஸமயத்தில் "இராமனுசன் புகழ்பாடி" ன திருவரங்கத்தமுதனார் என்று ஸுப்ரஸித்தரான ராமானுஜ ப்ரசிஷ்யர் நூற்றந்தாதிக்கு வக்தாவென்று "மொழியைக் கடக்கும் பெரும்புகழான்" என்கிற ௭-வது பாசுரத்தாலேயே ஸுஸ்பஷ்டம்.

இன்னாரின்னார் இன்னவின்ன நித்யஸூரியின் அவதாரமென்று ஸ்ரீநாத யாமுன யதிவர குருகேச கூரேச பட்டாரக ஸ்ரீரங்காம்ருத,நிகமாந்த தேசிகர்களாகும் திவ்யஸூரிகளுடைய தம் தம் பூர்வாசார்ய விஷயங்களான உபகாரஸ்மரண வாக்யங்களில் அம்சாவதாரக் குறிப்புகளையுடைய கல்வெட்டு விபஜனங்கள் தென்படமாட்டா. இவ்வித விபஜனங்களை விசேஷித்துச் செய்திருக்ககூடிய திவ்யஸூக்திகளான ப்ரபந்தஸார குருபரம்பரா ஸாரங்களிலும் கூட பொய்கையாரை ஸ்ரீபாஞ்சஜன்யாம்சராகவும், பூதத்தாரை கதாம்சராகவும், பேயாரை நந்தகாம்சராகவும், திருமழிசைப்பிரானை ஸுதர்சனாம்சராகவும், நம்மாழ்வாரை ஸ்ரீவிஷ்வக்ஸேநாம்சராகவும், மதுரகவிகளை குமுதாம்சராகவும், குலசேகரப் பெருமாளை கௌஸ்துபாம்சராகவும், பெரியாழ்வாரை கருடாம்சராகவும், தொண்டரடிப்பொடிகளை வனமாலாம்சராகவும் பாண்பெருமாளை ஸ்ரீவத்ஸாம்சராகவும், திருமங்கையாழ்வாரை சார்ங்காம்சராகவும், ஸ்ரீதேசிகன் அறுதியிடாதகாரணத்தால், ஆழ்வார்கள் இன்னவின்ன அம்சாவதாரர்கள் என்று கோஷிக்கும் உலக வழக்கத்தையும் இதற்கு மூலப்ரமாணங்களான குருபரம்பரா க்ரந்தங்களின் வசனங்களையும் இதுவரையிலும் இப்போதும் எந்த ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த நிர்வாஹகர்களும் இகழ்ந்து ஒழித்ததில்லையாயிருக்க இந்த ராமாநுஜ சேஷாவதாரத்வ ப்ரசம்ஸை மாத்திரம் ஸ்ரீதேசிகஸூக்திகளால் குறிப்பிடப்படும் வசனப்ராமாண்யமில்லாத தென்கிறதைக் கொண்டு தள்ளிவிடப்பட வேண்டுமென்பது ஓர் ந்யாய மாகாது. மொத்தமாய் பகவானுடைய அநுப்ரவேச முடையவர்கள் என்று ஆழ்வாராசார்யர்களிடம் மஹாவிச்வாஸத்தை நிலைநாட்டும் ஆதராதிசயமுடைய வசனங்களைமாத்திரம் ஸ்ரீதேசிகஸூக்திகளில் காணலாம்.

இப்படி ஸ்ரீராமாநுஜன் சேஷாவதாரர் என்பது ஸகல பூர்வாசார்யர்களாலும் அங்கீகரிக்கப்பட்ட உண்மையென்று பூர்வீகரும் இக்காலத்தியருமாக எவர்கள் உத்கோஷித்திருந்தாலும், இதை விசேஷித்து அறுதியிட்டிருக்க வேண்டிய அமுதனாருந் தேசிகனும் அப்படி அறுதியிடாத காரணத்தாலேயே அவ்விதக் கொள்கை அப்ராமாணிக மென்றே தீர்மானிக்கவேண்டுமென்று ந்யாயம் சொல்லும்பக்ஷத்தில், இதேமாதிரியான ந்யாயத்தைக்கொண்டே,

“ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்தை நிலைநிறுத்தின ஒப்புயர்வில்லா மஹாப்ரபாவரான ஸ்ரீராமாநுஜனுடைய திவ்யஸூக்திகளில், ஸ்ரீபராசர வ்யாஸ போதாயன டங்க த்ரமிட குஹதேவ நாத யாமுனாதிகளை ஸ்ரீவிசிஷ்டாத்வைத வேதாந்த ஸித்தாந்த ஸ்தாபனாசார்யர்களாகவும், ஆப்ததமர்களாகவும் ஆதரத்துடன் குறிப்பிடப்பட்டிருக்கிறதேயொழிய, அவருடைய ஸூக்திகளில் ஏதாவதொரு க்ரந்தத்தின் ஓர் மூலையிலாவது பேர்கூடக் குறிப்பிடப்படாத ஆழ்வார்களிடம் ஸ்ரீராமாநுஜனுக்கு எள்ளளவும் மதிப்பேயில்லை; இருந்திருந்தால் அவர்கள் திறத்தில் நன்றியறிவைக் காட்டும் புகழ்வார்த்தை ஒன்றையாவது சொல்லாமல் விட்டிருப்பாரா? தம்முடைய க்ரந்தங்களொன்றிலும் சொல்லாவிட்டாலும் ‘ஆழ்வார்கள் விஷயமாக விடுதியாய்த் தனியன்கள் ஒன்றென்று



அருளிச்செய்திருக்கிறு ரென்பது, பிற்புள்ளார் ‘அவர் பேரை வைத்துச் செய்யும் சமத்காரங்கள். ‘மாறனடிபணிந்துய்ந்தவ னிராமாநுசன்.’ மாறன் துணையடிக் கீழ் வாழ்வையுகக்குமிராமாநுசன்.’ ‘வகுளதரமஹர்ஷி’ ஆழ்வார்களின் ‘துய்யதமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே’ ‘[illegible]’, ‘[illegible]’, ‘[illegible]’, ‘இந்த ஸித்தாந்தத்திற்கு கலியுகாரம்பத்தில் நம்மாழ்வார் ஆசார்யரானார்,’ என்றிப்படிச்செல்லாம் ஸ்ரீராமாநுஜனுக்குப் பின்னுள்வந்த அமுதனார் தேசிகன் முதலானோர், ஸ்ரீராமாநுஜ ஸூக்திகளில் நிர்த்தேசிக்கப்படவேண்டிய ப்ரமாணவலிமையில்லாத ஆழ்வார்களை, அபரிமிதமாய்த் தங்கள் குலதெய்வமென்று தங்கள்ஸூக்திகளில் கொண்டாடுவதெல்லாம் அப்ராமாணிகாநுஷ்டானம். ஸ்ரீராமாநுஜனுடைய ப்ராசார்யரான ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்த ஸ்தோத்ர ரத்னத்தில் ‘ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரியுகளம்’ என்கிற ப்ரசம்ஸையும் நம்மாழ்வாரைத்தான் குறிக்கிற தென்கிற. ஸ்ரீதேசிகாதிகளுடைய வ்யாக்யானமும், ஸ்ரீராமாநுஜ பரிக்ரஹமில்லாமையால், ஆழ்வாரைதர்சனாசார்யராக உலகத்தார் ஒப்புக்கொள்ளும்படி ராமாநுஜசிஷ்யப்ரசிஷ்யகோடிகள் விசேஷப்ரயத்னத்துடன் செய்துவந்த ஓர் ஸாங்கேதிகமான அள்ளுக்கட்டு. ஆளவந்தார் குலத்தார் தாங்கள் குலதெய்வமாகக் கொண்டாடி வந்திருக்கக்கூடிய வகுளபுஷ்பதாரணசின்ஹமுடைய ஓர் பகவன்மூர்த்தி விசேஷத்தைக்குறித்த வணக்கம் தான் அந்த ஸ்லோகத்திலுள்ளது. ஆளவந்தார் ஸூக்திகளில் வேறெங்கும் ஸ்பஷ்டமாய் ப்ரசம்ஸியாத நம்மாழ்வாரை இந்த ஸ்தோத்ரரத்னத்தில் இவரோரிடத்திலாவது ப்ரசம்ஸித்தாரென்பது உண்மையானால், ஸ்பஷ்டமாய் ஸ்ரீசடகோபன், பராங்குசன் என்றதிருநாமங்களிலொன்றால் குறிக்கும்படி ஸ்லோகஅமைப்புக்கு அவர்சக்தராகாமல் போனாரா? ஆகையால்அவர் நிர்த்தேசித்தது அடுத்த ஸ்லோகத்தாலேயும் புகழப்படும் தம் குலதெய்வமும் குலதனமுமான பெருமாளைத்தான். ராமாநுஜனுக்கு பின்புள்ளாருடைய ஸாங்கேதிக வ்யாக்யானம் ஸம்சயாஸ்பதம் இவர்கள் ஆழ்வார்களை விசேஷித்து ஆசார்ய ஸ்தானீயர்களைப் போல் கொண்டாடுவதெல்லாம் அப்ராமாணிகாநுஷ்டானம். ஸ்ரீராமாநுஜ மதஸ்தனான ஸ்ரீவைஷ்ணவன் எவனும், ஸங்கேதபயமில்லாத ப்ரமாணசரணனாயிருப்பது நிஜமானால் நிர்த்தாக்ஷிண்யமாய் அக்கொண்டாட்டத்தை ஒப்புக்கொள்ளாமல் தள்ளிவிடவேண்டும்”

என்று ஓர் குயுக்திசாலி ஸார்வபௌமன் ந்யாயம் சொல்லத்துணிந்தானேயாகில் (இப்படித்துணிவுற்று வெளிவ்யவஹாரத்திற்கு ஸ்ரீவைஷ்ணவகோஷ்டிகளில் விளங்கிவரும் வித்யாவன்கள் அடியேனுக்குத் தெரிந்தவர்களில் பலருண்டு), அவன் கொண்ட ந்யாயம் ந்யாயமல்ல, ந்யாயாபாஸம்என்று நிச்சயம் சொல்லமுடியுமானால்,

‘ராமாநுஜனை விசேஷித்துக்கொண்டாடியிருக்கும் அமுதனாரும் தேசிகனும் தம் ஸூக்திகளில் ஸ்பஷ்டமாய் அருளிச்செய்யப்பட்டிராத ராமாநுஜ சேஷாம்சத்வ

த்தை, குருபரம்பராப்ரபாவ க்ரந்தங்களில் சொல்லிப் புகழ்ந்த பூர்வாசார்யவசனங்களிலுள்ள ஆதராதிசயத்தாலும், வெகுகாலமாய் உலகமெல்லாம் வேரூன்றிக்கிடக்கும் ப்ரஸித்தமான கொள்கையாலுமே, அமுதனார் தேசிகன் ஸூக்திகளின் ப்ராமாண்யத்தில் மஹாவிச்வாஸமுடைய ஸ்ரீவைஷ்ணவரெவரும் ப்ராமாணிகமாக விச்வஸிப்பது தகாது'

என்று யாராவது சொல்லும் ந்யாயத்தை மாத்திரம் ஸமீசீனந்யாயமென்று ஒப்புக்கொள்வதற்கு எப்படி முடியும்? அதற்கு ஸமாதானம் உண்டானால் இதற்கும் ஸமாதானம் உண்டு. ஆழ்வார்கள் திறத்தில் ராமாநுஜஸூக்தி நிர்த்தேசமில்லாமையைக் கொண்டு அவர்களைக்குலதெய்வமாக சிரஸா வஹிக்குமவர்களை ப்ரமாண விரோதிகளென்று காட்ட முயலும் போலி ந்யாயத்திற்கும், ஸ்ரீரங்காம்ருத தேசிகர்களின் ஸூக்திகளில் ஸ்பஷ்ட நிர்த்தேசமில்லாத காரணத்தால் பண்டித பாமர ஸகலலோகாங்கீக்ருதமானதும் குற்றமொன்றுமில்லாததுமான ராமாநுஜ சேஷாவதாரத்வத்தில் விச்வாஸமுடையவர்களையும் அவ்விச்வாஸத்திற்குக் காரணபூதர்களான குருபரம்பரா க்ரந்த கர்த்தாக்களெல்லோரையும் வாசியற ப்ரமாணவிரோதிகளென்று காட்டமுயலும் போலிந்யாயத்திற்கும் வாசியொன்றையும் காணேம்.

“வைகுந்தம், வேங்கடம், மாலிருஞ்சோலை” முதலான தன்னிருப்பிடங்களோடு கூடவே வந்து புகுந்து மாயன் குடிகொண்டிருக்கும் இல்லமாகும் மனத்தையுடைய இராமானுசனை, லக்ஷ்மீ லக்ஷ்மிகாந்தர்கள் பள்ளிகொள்ளும் கட்டிலாகிய ஸ்ரீ அனந்தாழ்வானுடைய திருவவதாரமாகக் கொண்டாடுவதை, நூற்றந்தாதி, ௧0௬ - வது பாசுரத்தை அருளிச்செய்த அமுதனாரும், அவர் திருவுள்ளத்திற் கிணங்கிய ‘ராமாநுஜ தயாபாத்ரரும்’ உகந்தருள மாட்டார்களோ?

லோகரக்ஷணத்திற்காக எம்பெருமானாஜ்ஞையால் அவதரித்தருளின நம்மாழ்வார் பெரியாழ்வார் முதலிய திவ்யஸூரிகள், பெருந்தன்மையரான தங்கள் வாஸத்திற் கியலாததும் மிகவும் அருவருக்கத்தகுந்ததுமான இவ்விருள்தருமா ஞாலத்தின் நடுவேயிருந்து ஸம்ஸாரிகளின் மனங்களைத் திருத்துவதான பகவத் கைங்கர்யத்தை நிர்வஹித்தருளும்போது, அந்தர்யாமி ஸாந்நித்யம் விலகாமலிருக்கச் செய்தேயும், வெளிக்கண்ணுக் கெதிர்ப்படாத பகவானுடைய பிரிவைப்பொறுக்க மாட்டாமல் சிற்சில ஸமயங்களில் அவர்கள் கதறின பாசுரங்களைக்கொண்டு அவ்வாழ்வார்களை, எம்பெருமானாஜ்ஞையாலே இங்கெழுந்தருளி அவன் கார்யங்களை நிர்வஹிக்கும்போதும் அவன் ஸந்நிதான தூரவர்த்திகளாயிருப்பதை ஸஹியாமல் அவன் திருவோலக்கத்தை மறுபடியும் சேர்ந்தடைவதிலேயே நோக்குடன் த்வரித்துக்கொண்டிருக்கும் விஷ்வக்ஸேன கருடாகளாக உத்ப்ரேக்ஷிப்பது எவ்வளவு பொருத்தமுடையதோ அவ்வளவு பொருத்தம், விரஹ க்லேசங்களை வெளியிடும் சொற்களொன்றுமில்லாமல், விரஹமுண்டாக்கூடிய க்ஷணத்திலேயே உயிர் தரிக்



காதானதால் என்றைக்குமே விரஹத்திற் கிடங்கொடாத இளையபெருமாளைப்போலே, தம் செல்லப்பிள்ளையாகிற திவ்ய ஸ்ரீநிதியை நொடிப்பொழுதுங்கூடத் தம்முடைய மடியை விட்டகல விடாமற் செய்துகொண்டு, அந்த திவ்ய நிதியின் நிரந்தரானுபவத்தாலுண்டாகும் ப்ரேமரஸ ப்ரவாஹங்களான ஸ்வஸித்தாந்தோபதேசரூப ஸூக்திகளிலும் விரோதி நிரஸனரூப ஸூக்திகளிலும் வாசியின்றி, ஸைர்பர்யம், காம்பீர்யம், இனிப்பு, பரிமளம், தெளிவு இவைகளுடன் கரைபுரண்டோடும் ஸ்ரீராமாநுஜ யதீந்த்ர வசனாம்ருத தாரைகளை அநுபவிப்பார்க்கு, இந்த யதிராஜன், இடைவிடாமல் ஓர் அற்புதக் கட்டிலாகும் தன்னுடைய மடியிலேயே விளையாடிக்கொண்டிருக்கும் திவ்ய தம்பதிகளின் திருவடிகளுடைய ஸதத ஸம்பர்க்கத்தாலே ஸாமோத ஸ்வாங்கனாய், அக்காரணத்தாலேயே எப்பொழுதும் ச்ருதி பரிமளத்தை அபரிமிதமாய் வீசிக்கொண்டிருக்கும் ஸஹஸ்ர வதனங்களையுமுடைய ஸ்ரீ அனந்தாழ்வானேயென்று சொன்னால், இது அமுதனாரும் தேசிகனும் உகந்தருளத்தகாத உத்ப்ரேக்ஷையோ? அவர்கள் பாசுரங்களிலும் ச்லோகங்களிலும் எடுத்த உத்ப்ரேக்ஷைகள் ஸ்ரீ யதிராஜ வைபவ வர்ணனத்தின் கோடி காட்டினது மாத்திரமேயன்றி அவதாரமூல நித்யஸூரி வ்யக்தியின் நிஷ்கர்ஷங்களேயல்லவென்று, அவர்களுடைய திருவடிகளை ஸ்மரித்துக்கொண்டு அந்த ஸூக்திகளை ஆதரத்துடன் திரும்பத் திரும்ப அநுஸந்திப்பவர்க்கு நன்கு புலப்படும்

இவ்வளவாகச் சொல்லப்பட்ட ந்யாயங்களால், அமுதனாரும் தேசிகனும் ஸ்ரீ யதிராஜ கல்யாணகுண வைபவங்களில் ஈடுபாடாகிற அமுதக்கடல் பொங்கிவழிந்த போக்குக் கால்வாய்களான நூற்றந்தாதி யதிராஜஸப்ததிப் பாடல்களால் சில மஹாகுணப்ரதர்சகங்களாகிற உத்ப்ரேக்ஷைகளைச் செய்தருளினார்களேயொழிய அவதாரமூல வ்யக்தி நிஷ்கர்ஷம் செய்யவில்லையென்றும், அவர்கள் ஸ்ரீ ராமாநுஜ சேஷாவதாரத்வ விஷயமான உலகக் கொள்கைக்கு விரோதமாய் ஒன்றையும் எவ்விதத்திலும் அருளிச்செய்யவில்லையென்றும் காட்டப்பட்டது. இனி, இந்த சேஷாவதாரத்வ விஷயமான லோகப்ரதிபத்திக்கு ஆதாரமாயுள்ள ப்ரமாணங்கள் ப்ரபலமானவைகளேயன்றி எளிதில் தள்ளிவிடப்படத் தக்கவைகளல்லவென்று காட்டப்படும்.

எம்பெருமானுக்கு ஸமகாலிகரும், அவர் திருவடிகளை ஆச்ரயித்தவரும், அவர் கைங்கர்யத்தைத் தவிர்த்துத் தெருவாசலில் உத்ஸவக்கோலங்கொண்டெழுந்தருளும் அழகிய மணவாளனையுங்கூடக் கண்டு திருவடி தொழ இல்லாராய், பாரமைகாந்த்யத்தின் எல்லை நிலமாய், ஆசார்ய நிஷ்டையில் வேரூன்றிய மனத்தையுடையராய், ௭௪ - ஸிம்ஹாஸனாதிபதிகளில் ஒருவருமாய், ஆந்த்ரபூர்ணரென்று ப்ரஸித்தரான ஸ்ரீ வடுகநம்பிகளால், ஸாங்கேதிக வம்புக் கட்டுக்கதைகளின் வாஸனையொன்றுமில்லாமல், ‘கமேவ [illegible]

ஶ்ராயாவஷ்ணு வெவஹவ வூதிகஉ வெஶாஷி யதிராஜ வெவெஹவம்' என்னும்படி நன்றாக அருளிச்செய்யப்பட்டிருக்கும், ஸகல குருபரம்பராப்ரபாவ ப்ரகடன க்ரந்தங்களுக்கும் மூல க்ரந்தமான யதிராஜ வைபத்தின் ஏ-வது ச்லோகத்தில் , 'வெதாஜ ஹிஷாஸாஜ ஹஉயூநாய பாஹ்யாஜா ஹ்ராஜ உதாவநாவெதூ। வெஶஷாம்ஶகஃ கெஶவயஜ்வ தெவ்யாம் தெஜொதியிஃ ஶூ ஜய விராவஸீஷ॥' (வேதங்களை ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளாத புறச் சமயிகளையும், வேதங்களை ப்ரமாணமாக அநுஸரித்துங்கூட அவைகளுக்குப் பொருந்தாப் பொருளுரைத்து உலகத்தினரின் புத்திகளைப் பாழாக்கும் குத்ருஷ்டிகளையும் நிரஸித்து, வேதாந்தங்களின் முடிவான கொள்கையை நிலைநாட்டுவதற்காக, ஸ்ரீ கேசவஸோமயாஜிகளின் தேவிகளிடம் சேஷாம்சரான ஓர் ஞானச்சுடர்வெள்ளம் போன்ற உருவுடையார் அவதரித்தருளினர்-) என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

இதை அநுஸரித்து ஸ்ரீதேசிகன் திருவடிகளான ஸ்ரீ ப்ரம்ஹதந்த்ரஸ்வதந்த்ரஜீயர், தாம்தூப்புல்நாயனரிடத்தில் பகவத்விஷயம் ஸேவித்தகாலத்தில் ஸ்ரீஉெதஷாஜ ஷிஜாஜ ஷூாவநாநித்ய தீக்ஷிதனை ஸ்ரீமந்நாராயணன் தொடக்கமாகவும், தமக்கு பகவத்விஷயோபதேஷ்டாவான தூப்புல் நாயனாளவாகவும், ஆழ்வார்களுட்பட ஆசார்யபரம்பரையை ஸங்க்ரஹமாய் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ச்லோகத்தாலே, அவர்களிடம் தமக்குள்ள நன்றியறிவு தோற்றும்படியும் லோகோபகாரகமாகவும் அருளிச்செய்த திவ்யஸூரி ஸ்தோத்ரத்தில் 'வெதூாஜூா ஷஂஹவம் விஷெணா தீஶஂந ஷூாவநொதாகம்। தாணூஉணூெ வெஶஷஉூதிஂம் ராஉாநூஜம் ஹஜெ॥" (தொண்டை மண்டலத்தில் சித்திரைத்திருவாதிரையில் ஸ்ரீவிஷ்ணுவினுடைய தர்சனத்தைஸ்தாபிக்க ஆவல்கொண்டு அவதரித்த, சேஷமூர்த்தியான ராமாநுஜனை பஜிக்கிறேன்) என்ற 15-வது ஶ்லோகமானது ஸம்ப்ரதாய ஜ்ஞாநலேசமுமுடைய ஸ்ரீவைஷ்வணவனெவனுக்கும் மனப்பாடமாயிருக்கும். 'வெஶஷஉூதிஂ ராஉாநூஜம்' எனறருளிச்செய்த இந்த ஸ்ரீதேசிகாந்தரங்க சிஷ்யரான ஜீயருக்கு, இராமாநுஜநூற்றந்தாதி ௯௩-வது பாசுரத்தினுடையவும் யதிராஜஸப்ததியின் ௧௨-வது ஶ்லோகத்தினுடையவும் உண்மையான பொருள் தெரிந்திருக்கமாட்டாதென்று இப்போது எவர்களாவது சொல்லத்துணிவார்களா ?).

இதை அநுஸரித்து த்ரிதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் அருளிச்செய்த மூவாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தில், எம்பெருமானார் வைபவத்தின் ஆரம்பத்தில் "எம்பெருமான் வேதாந்த ஸூத்திரத்திற்கு ஸ்ரீபாஷ்ய முகத்தாலே ஸமீசீனார்த்தங்களைத் தெரிவிக்கைக்காகத் திருவனந்தாழ்வானை



ஸ்ரீபெரும்பூதூரில் ஆஸூரி குலதிலகரான கேசவஸோமயாஜிகளுக்கு கலி ௪௧௧௮ - வதான பிங்கள ஸ்ரீ சித்திரையீ திருவாதிரை நக்ஷத்திரத்தில் குமாரராய் அவதரிப்பித்தான்" என்று அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. சாஸ்த்ர விஹித குருப்ரகாசனரூப பரமதர்மாநுஷ்டான கைங்கர்யத்தையே ஸ்வயம் புருஷார்த்தமாகக் கைக்கொண்டு, குருபரம்பரையைச் சுருக்கமாயும் விரிவாயும் பெருந்தகவுடன் அருளிச்செய்த பரமைகாந்திகளான இம்மூன்று ஆசார்யர்களுடைய ஸூக்திகளிலும் திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் கோமுகி த்வாரத்தின் வழியாய் ஸர்ப்ப உருவத்துடன் உடையவர் உள்ளே நுழைந்து வந்தாரென்கிற கதை அகப்படாது.

இவைகளில் முதலாவதான ஸ்ரீயதிராஜ வைபவம் என்ற ௧௧௪ - ச்லோகங்களடங்கிய ஸம்ஸ்க்ருத க்ரந்தமானது இரு கலையாராலும் வெகுகாலமாய் ஆதரத்துடன் சிரஸா வஹிக்கப்பட்ட ப்ரமாண க்ரந்தம். ஸ்ரீரங்கத்தில், ௪௰ - வருஷங்களுக்குமுன் முனித்ரய ஸம்ப்ரதாய நிர்வாஹகமான ஆசார்யகத்தை நடத்திவந்த ஸ்ரீமதாண்டவன் திருவடிகளில் ஸ்வாத்ம பரஸமர்ப்பணம் செய்திருந்த சில ஸ்ரீவைஷ்ணவ அம்மைகளுக்கும்; இக்காலத்திலும் சென்னை வண்ணாரப்பேட்டை சாத்தாத வைஷ்ணவர்களுக்குங்கூட இந்த யதிராஜவைபவம் மனப்பாடமாயிருந்ததை அடியேன் கண்டிருக்கக்கூடுமானால் இக்ரந்தத்தின் ஸார்வத்ரிக ப்ராமாண்ய ப்ரஸித்தி எப்படிப்பட்டதென்று அறியலாம்.

மேலும், எம்பெருமான் முதல் தூப்புல் நாயனாளவாக ஸங்க்ரஹமாய் திவ்யஸூரிகளின் அவதார வர்ணனம் செய்தருளிக் கடைசியில் இக்காலத்தியரின் ஸம்சய பயத்தாலே போல, 'ப்ரம்ஹதந்த்ர ஸ்வதந்த்ரரால் வர்ணிக்கப்பட்ட இந்த திவ்யஸூரி ஸ்தோத்ரத்தை காலையில் எழுந்ததும் அநுஸந்திக்குமவர் ஆசார்யர்களின் அநுக்ரஹத்தால் வைஷ்ணவோத்தமராகி ஸகல பாபங்களின்னின்றும் விடுபட்டு ஐஹிகாமுஷ்மிக மஹாபுருஷார்த்தங்களை அடைவார்' என்று பல்ச்ருதியுடன் கூடிய இந்த திவ்யஸூரி ஸ்தோத்ரத்தை ஸ்ரீதேசிகன் திருவடிகளான ப்ரம்ஹதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் அருளிச்செய்தாரென்கிற விஷயத்தை மூவாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தில் ஸ்ரீ தேசிகன் வைபவத்தினிறுதியில் காண்க. அங்கே, ஸ்ரீதேசிகன் "பெருங்கூட்டத்து முதலிகளுக்கு ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயங்களையும் மற்றுமுள்ள விசேஷார்த்தங்களையும் ஸ்திரீகரித்துக்கொண்டிருக்க திவ்ய ப்ரபந்தார்த்தங்களில் ஈடுபட்டிருக்கிற ப்ரும்ஹதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும், 'ஸ்ரீஉெதஷாஜ ஷிஜாஜ ஷூாவநாநித்ய தீக்ஷிதம் ஸ்ரீஉஹநாராயணம் வநெ ஹாஜம் ஶுூரி ஶ்ராவூதஉெஃ।' என்று ப்ரதமாசார்யன் விஷயத்திலும், ஆழ்வார்கள் தர்மிக்ராஹக ப்ரமாணத்து ஸாரமாக 'தாஜாபரம் ஶ்ருவணெஜாதம்' என்றுதுட

ங்கி திவ்யஸூரிக ளிடத்திலும் சில ஆசார்யர்களிடத்திலும் க்ருதஜ்ஞதையாலே திவ்ய ஸ்தோத்ரம் என்று ஒரு ஸ்தோத்ரத்தைச்செய்து தேசிகன் ஸந்நிதியில் ஸமர்ப்பிக்க, தேசிகனும் குளிரக் கடாக்ஷித்தருளி, 'இது செவிக்கினிய செஞ்சொல்லா யிருந்தது, என்று அருளிச்செய்து, 'ஆழ்வார்களவதரித்த நாளூர் திங்கள்' என்று தொடங்கி ப்ரபந்தஸாரம் என்று தமிழிலும் செய்தருளினர்' என்று த்ரிதீய ப்ரம்ஹதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி அருளிச்செய்திருக்கிறபடியால், திவ்யஸூரி ஸ்தோத்ரம் எனும் க்ரந்தத்திற்கு வக்தாவின் விஷயமாகவும் அதின் ப்ராமாண்ய விஷயமாகவும் நம் பூர்வாசார்யர்களுக்கிருந்த ஸர்வதோ முகமான விச்வாஸத்தை ஆஸ்திக ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸம்சயிக்க ந்யாயமில்லை.

இவ்விதமான உபபத்திகளையும் ப்ரமாணகதிகளின் வ்யவஸ்தைகளையும் ஆதரிக்கவேண்டியது ஜனங்களுக்கு வழிகாட்டிகளாக மதிக்கப்படுகிற பெரியோர்களின் கடமை என்பது இவ்வளவில் விஜ்ஞாபிக்கப்பட்டது.

ஸ்ரீ:.

## ஸ்ரீமத் ராமாநுஜ மதாபிவ்ருத்தி.

(ஸ்ரீ ஊ. வே. தி. ஈ. சடகோபாசார்யர், பி. ஏ., பி. எல்.,)

(முன் தொடர்ச்சி.)

பிறகு நனைந்த பூமியை உழுவதுபோல் ஆபாதமாக க்ரஹிக்கப்பட்டவர்த்தங்களை வாக்யார்த்த விசாரத்தால் ஸம்சய விபர்யயாதி தோஷங்களைச் சோதித்து த்ருடப்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்விதம் தத்வார்த்தங்களைக் கசடறத் தெளிந்தபிறகு உழுது பண்படுத்தப்பட்ட பூமியில் விதை விதைப்பது போல் பரம புருஷார்த்த உபாய பூதமான மந்த்ரோப தேசம் பெறுவது கைமேல் பலம் கொடுப்பதாகு மென்பது நிச்சயம். இவ்வரிசைப்படி கூடிய வரையில் அனுஷ்டிப்பது ஆவச்யகமாகையால் அவ்வவ்வதிகாரிகளுக்குத் தக்கவாறு இந்த க்ரமத்தை அநுஸரிக்க யத்தனிப்பது உசிதமாகும்.

நம் ஸித்தாந்தம் அதின் ஏற்றத்துக்குத் தக்கவாறு ப்ரசாரமடையாமலிருப்பதற்கு முக்கிய காரணம் ஸ்வயூத்ய (நம்மவர்க்குள்ளேயே கலக) மென்பதை ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து அவ்வித கலகத்தை ஸர்வ ப்ரகாரமாகவும் மிகுதியில்லாமல் நிர்மூலம் பண்ணுவதைத் தம் தம் முதற்கடமையாக நினைத்து வ்யாபரிக்கவேண்டியதவசியம். அவ்வித யத்தனம் ஸபலமானால் களையெடுத்த பயிர்போலும் வ்யாதி நீங்கி



சரீரம் போலும் நம் ஸித்தாந்தம் மேன்மேலும் ஓங்கி வளர்வதற்குத் தடையிராது. இது விஷயமாக நமது பகவத் ஸந்நதிகளில் இப்போது நடந்து வரும் அதிசோசநீயமான அஸூயா த்வேஷ மாத்ஸர்யாதி ரஜஸ் தமோகுணங்களின் விளையாடல்களை எவ்வகையிலும் ஒழித்து சுத்த ஸ்த்வ மூர்த்தியாகிய ஸ்ரீமந் நாராயணனின் ஸாந்நித்யத்திற் கனுகுணமாக ஸாத்விக வ்யாபாரங்களையே தலையெடுக்கச் செய்யவேண்டியது ஆஸ்திகர்களனைவருடையவும் கடமையாகும். இதற்கு ஸத்வோத்தரர்களான ஸமபுத்தியும் சாந்தியுமுள்ள ப்ரஜ்ஞாவான்கள் அபிமானித்த அபிப்ராயங்கள் நிறைவேறும்படியாகவும், கலகத்திலேயே குதூஹலமடையும் ராஜஸ தாமஸ ப்ரக்ருதிகளுக்குச் செல்வாக்கில்லாமல் செய்யவேண்டியதும் முதல் உபாயமாகும். தற்காலமிருக்கும் நிலைமையில் ஸ்வரூபஜ்ஞானமும் ஆத்மகுணமும் அமையாதவர்கள் இவ்விஷயங்களில் அத்யக்ஷர்களாகவிருந்து கார்யங்கள் நடைபெறுவதே இவ்வித வைபரீத்யத்திற்கு காரணமென்பது புத்திமான்கள் ஏற்கனவே அறிந்திருக்கக் கூடிய விஷயம். இவ்விதமான ஸ்திதியைச் சீர்திருத்துவதற்காக நம் ஸம்ப்ரதாயஸ்தர்களான வைதிகர்களும், லௌகிகர்களும் ஏகமதிகளாக ப்ரவர்த்தித்துத் தக்க பரிஹாரம் செய்தாலொழிய நம் ஸம்ப்ரதாயத்தின் அபிவ்ருத்திக்கு மார்க்கம் ஏற்படமாட்டாது. நம் பூர்வாசார்யர்கள் இம்மாதிரியாக யோக்யதையில்லாதவர்கள் ப்ரமுகர்களாய்விடுவது பகவத்ஸந்நிதிகளில் ஏற்பட்டுவிடுமோவென்று பயந்தே அது வாராமல் காப்பதற்காக அந்தந்த ஸ்தலங்களில் அக்காலத்தில் பகவத்பக்தி, ஜ்ஞானம், உயர்ந்த ஆசாரம், குலப்பேறு, முதலிய குணஸம்பத்துக்கள் பொருந்திய சான்றோர்களை நிர்வாஹகர்களாக நியமித்து வ்யவஸ்தை செய்திருந்தார்கள். அந்த ஸ்தானத்தை வஹித்தவர்கள் அதற்குத் தகுந்த யோக்யதையுள்ளவர்களாயிருந்து தம் பாரத்தை க்ரமமான படிகளில் நிர்வஹித்து வந்த வரையில் பகவத்ஸந்நிதி பூர்வாசார்யர்களின் உத்தேசப்படி ஸத்ஸம்ப்ரதாய அபிவ்ருத்திக்குப் பரமோபகாரகமாக விருந்து வந்தன. பிறகு காலவைஷம்யத்தால் நிர்வாஹக ஸ்தானத்தை யடைபவர்களுக்கு அவ்வுத்தமாதிகாரத்துக் குரிய பூர்த்தி யில்லாமை காரணமாகவே இப்போது தென்படும் ஸர்வப்ரகாரமான தோஷங்களும் ஸம்பவித்திருக்கின்றன. இவ்வகையான தோஷங்களைப் பரிஹரிக்கும் விஷயத்திலும் இன்னும் நம்ஸித்தாந்தம் ஸம்ப்ரதாயம் இவைகளை ஸரியாக வோங்கி ப்பரவச்செய்வதிலும் இந்த ஸம்ப்ரதாயத்தை யவலம்பித்த மடாதிபதிகளும் மற்றுமுள்ள வாசார்யர்களும் பஹுவிதமாக வுபகாரம் பண்ணக்கூடும். அப்படியுபகரிப்பதே யவர்களுக்கு ஸ்வதர்ம மானபடியால் இவ்வகையான ஸதாரம்பங்களைச்செய்ய அர்ஹராயிருப்பவர்கள் உசிதமார்க்கங்களில் ப்ரவர்த்திக்கும் பக்ஷத்தில் அதை அவர்கள் அநுமோதித்து ஸபலமாக்குவதற்கு யாதொரு தடையுமிருக்க மாட்டாது.

இப்படிக் காலவைகுண்யத்தால் நேர்ந்திருக்கும் தோஷங்களைப் பரிஹரிப்பதுடன் நம்தேசத்தின் இதர பாகங்களில், அதாவது ஆந்த்ர கர்நாடக ஹிந்

துஸ்தாநாதி ஸ்தலங்களில் ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்தம் நன்ருய்ப் பரவுவதற்கு வேண்டிய யத்நங்களை நாம் செய்யவேண்டிய தவச்யம். இதர்க்காக மேற்கண்ட ஸ்தலங்களில் வழங்கும் தெலுங்கு ஹிந்தி முதலிய தேசபாஷைகளில் நம் ஸித்தாந்தத்தை ப்ரவசனம் பண்ணத்தக்கவர்களுக்கு அந்த பாஷைகளில் பரிசயம் பண்ணுவதற்கு வேண்டிய ஸௌகர்யங்களை ஏற்பாடு செய்ய வேண்டிய தவச்யம். பாஷையினுல் உண்டான ப்ரதிபந்தகத்தினுலேயே தான் நம் ஸம்ப்ரதாயத்தில் பூர்ண யோக்யதை யுள்ளவர்கள் அநேகமாக இதரஸ்தலங்களுக்குப் போகாமல் அங்கே நம் ஸித்தாந்தத்துக்கு ஸரியான ப்ரசாரமில்லாம லிருக்கிறது. ஆகையால் அந்தப் ப்ரதிபந்தகத்தை நிவர்த்தி பண்ண வேண்டியது அத்யவச்யம். வேறுஸ்தலங்களிலிருக்கும் ஆஸ்திக ஜநங்கள் ராமாநுஜ ஸித்தாந்தத்தின் தத்வத்தையறிந்துகொள்ளும் பக்ஷத்தில் மேன்மேலும் ஆஸ்தையுடன் நம் க்ரந்தங்களைப் பரிசயம் பண்ணவும் நம் ஸம்ப்ரதாயார்த்தங்களை தெளிய அறியவும் அவர்கள் ப்ரவ்ருத்திப்பார்கள் என்பதர்க்கு ஸந்தேஹமில்லை. அப்படிப் ப்ரவ்ருத்தித்தால் நம் ஸம்ப்ரதாயத்தில் தகுந்த தீர்ந்த யோக்யதை உள்ளவர்களுக்கு இடையூறில்லாமல் வ்ருத்திக்கு உபாயமும் ஸித்திக்கு மென்பது கவனிக்கத்தக்கது. ஆனுல் அப்படிப் பரஸ்தலங்களுக்குப் போய் ஸித்தாந்த ப்ரவசனம் பண்ண யத்தனிப்பவர்கள். ஜ்ஞானம், அனுஷ்டானம், க்ஷமை, சாந்தி முதலிய ஸத்குணங்கள் பொருந்தியவர்களாயும், ஆததாயித்வாதி (பேராசைமுதலிய) தோஷங்களின் வாஸனையே இல்லாதவர்களாயு மிருக்கவேண்டும். அவர்கள் நடவடிக்கைகளின் ப்ரகாரத்தை அந்ய தேசத்தார் கண்ணேக்கமாய்க் கவனிப்பது ஸஹஜ மாகையால் மநோவாக்காயங்களில் ஏகரூபமான விசுத்தியுடையவர்கள் தான் இந்த வ்யாபாரத்தை அதிகரிக்கத் தக்கவர்கள். இப்படித்தகுந்த வ்யக்திகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதர்க்கு நாம் வேண்டிய ஏர்ப்பாடுகளையும் ஸௌகர்யங்களையும் செய்தால் எல்லாவிதத்திலும் அது ஸஹஸ்ரகுணமாக பலிக்கும் என்பதில் ஸம்சயமே கிடையாது.

இவ்வகையாக நாநாவித மார்க்கங்களால் நமது ஸ்ரீபகவத் ராமாநுஜ மதாபிவ்ருத்தியைத் தேடவேண்டியது ஸ்ரீவைஷ்ணவ ஸித்காந்த ஸபையில் அந்வயித்தவர்களுடையவும் மற்றுமுள்ள நம் ஸம்ப்ரதாயஸ்தர்கள் அனைவருடையவும் முதற்கார்யமாகக் கைக்கொண்டு கால விளம்ப மில்லாமல் அதை ஸாதிக்க வேண்டியதற்குத் தகுந்த யத்னங்களைச் செய்யவேண்டிய தவச்ய கர்த்தவ்ய மாகும். இதையே தங்கள் ஸ்வதர்மமாக வெண்ணி நம் ஸம்ப்ரதாயஸ்தரெல்லோரும் குறையற்ற ஸௌஹார்த்தத்துடன் ஏகமதிகளாய் ஸ்ரீபகவத் ராமாநுஜ வம்சஜர்களான நமக்குள் உண்மையான ஸஹோதர பாவமே ஸ்வரூப ஸித்தமென்கிற வுணர்ச்சியுடன் நமது ஸித்தாந்த ப்ரவசன ரூபமான பகவத் கைங்கர்யத்தில் எப்போதும் விழிப்புள்ளவர்களாக விருக்கவேண்டும்



என்றும் அவர்களுடைய யத்நங்கள் ஏறக்குறைய விருந்தபோதிலும் அதை பக்தி க்ருதமென்கிற வ்யாகாரத்தால் ஸர்வேச்வரன் அங்கீகரித்து ஸம்பூர்ண பலப்ரதானம் பண்ணவேண்டு மென்றும் மிகவும் வணக்கத்துடன் அநந்தமான படிகளில் ப்ரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீ:.

## மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம்.

(ஸ்ரீ - உ. வே. வாஜபேயம் - வீரராகவ தாதாசார்யர்.

(முன் தொடர்ச்சி.)

இந்த அர்த்தத்தை 'ஏவம் ப்ராயஶ்சித்தே க்ருதே ஸம்ஸர்க்காநர்ஹதா ஸா ஜாதாயா ப்ரவிஶதி। யோகஸ்து ஸம்வ்யவஹார்யதாம் ப்ரவிஶதீ த்யஜேத்॥' என்கிற தீக்ஷிதருடைய வாக்யமானது நன்ருகவிளக்குகிறது. இதற்காகவே ப்ராயச்சித்தங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றனவாக ஏற்படுகிறது.

பாபத்துக்கு இரண்டுவிதமான சக்தி யிருக்கிறது. பரலோகத்தில் நரகம் முதலிய அநுபவங்களை உண்டு பண்ணுவது ஒன்று. மற்ருென்று இந்த லோகத்தில் சிஷ்டஜநங்களோடு சேரமுடியாமல் தடுப்பது. அப்படியே ப்ராயச்சித்தத்துக்கும் இரண்டு சக்தி யுண்டு. ஒன்று நரகாதி பரலோக ஸங்கடங்கள் நேராமல் தடுப்பது. மற்ருென்று இந்தலோகத்தில் சிஷ்டஜநங்களுடன் கலந்துகொள்ளும் யோக்யதையை உண்டுபண்ணி வைப்பது. இவ்விஷயம்,

'த்விவிதா ஹி பாபஸ்ய ஶக்தி: । ஐஹிகீ ஆமுஷ்மிகீ ச । தயோ: ஐஹிகீ ஶிஷ்டைஸ்ஸஹ ஸம்வ்யவஹாரம் நிவாரயதி । ஆமுஷ்மிகீ து நரகம் ப்ராபயதி । தந்நிவர்த்தக ப்ராயஶ்சித்தஸ்யாபி ஶக்தி த்வைவித்யம் । நரக நிவாரிகா வ்யவஹார ஜநநீ சேதி ॥' என்கிற மாதவீய, தீக்ஷிதீய, வாக்யங்களால் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் எந்த ப்ராயச்சித்தத்துக்கும் இந்த லோகத்தில் ஏர்ப்படக்கூடிய ப்ரயோஜநம் சிஷ்டஜநங்களோடு கலந்து கொள்வதுதான். இது பொதுவாக ப்ராயச்சித்தத்துக்குப் பிறகு உண்டென்பதில் ஸந்தேஹம் இல்லை. அப்படிக்கிடையாதென்று சொல்லுவதற்கு விசேஷவிதி கட்டாயமிருக்கவேண்டும். விசேஷவிதி இல்லாதவிடத்தில், பொது விதியைக்கொண்டே வ்யவஸ்தைசெய்ய வேண்டும். மதப்ரஷ்டன் விஷயத்தில் ஸம்வ்யவஹாரங்களைத் தடுக்கக்கூடிய விசேஷவிதி ஒன்றும் கிடையாதாகையால் ப்ராயச்சித்தம் செய்துகொண்டால் இவனுக்கு ஸம்வ்யவஹாரம் தானே, உண்டாகிறது. ஏனெனில் ப்ராயச்சித்தத்துக்கு இந்த லோகத்தில் வேறு ப்ர

யோஜநம் கிடையாதன்றே! மேலும் கீழ்ச்சொல்லிய தேவலஸ்ம்ருதியில், "ததஸ்ஸஞ்சர்ய பாபானாம் ஸங்க்ரஹ: ப்ரோக்தோ நாந்யதா" "ததஸ்ஸஞ்சர்ய தேஹேஷு ஸங்க்ரஹோ விதீயதே" என்றகிற வசனங்களில் மதப்ரஷ்டனுக்கு ப்ராயச் சித்தத்துக்குப் பிறகு குடும்பாதிகளுடன் சேர்க்கையுண்டென்று சொல்லப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. தவிர, ப்ருஹ்மஹத்யாதி மஹா பாதகங்களுக்குக்கூட பராயச்சித்த ஸம்வ்யவஹாராதிகள் உண்டென்று மநுஸ்ம்ருதி முதலியவைகளில் சொல்லப்பட்டிருப்பதால், அதற்குக் கீழ்ப்பட்ட பாபங்களைப்பற்றி விவாதிக்க இடமில்லை.

இப்படிச் சொல்லுவதால் ஸம்வயவஹாரம் செய்துகொள்ளக் கூடாத பாபமே இல்லையென்று நினைக்க இடமுண்டாவதாக ஆசங்கிக்கலாம். ஆனால் சாஸ்திரங்களின் அபிப்ராயம் அதுதான் என்று சொல்லவேண்டியிருக்கிறது. ஏனெனில், சாஸ்த்ரங்களில் எவ்வளவு க்ரூரமான பாபத்துக்கும் ப்ராயச்சித்தம் விதிக்கப்பட்டுவிட்டது. ப்ராயச்சித்தத்துக்கு ப்ரயோஜநமோவெனில், இந்த லோகத்தில் ஜநங்களோடு கலந்து கொள்வதுதான் என்று எல்லா ரிஷிகளும் ஒற்றுமையுடன் சொல்லிவிட்டார்கள். ஆகையால் எவ்வளவு க்ரூரமான பாபத்திலும் ப்ராயச்சித்தத்துக்குப் பிறகு இந்த லோக ஸமவ்யவஹாரம் உண்டென்பதில் தடை இல்லை. எந்த பாப விஷயமாய் லோகஸம்வ்யவஹாரம் சாஸ்திரத்துக்கு இஷ்டமில்லையோ, அங்கு அதற்கென்று தனியாக விதி இருக்க வேண்டும். உதாஹரணமாக, ஸமுத்ரயாநம் செய்த ப்ராம்மணனுக்கு ப்ராயச்சித்தத்தால் சுத்திசெய்து வைத்தாலும் அவனுடன் ஸம்வ்யவஹாரம் செய்யக்கூடாதென்பது, 'த்விஜஸ்யாப்தௌ து நௌயாது: சோதிதஸ்யாப்யஸங்க்ரஹ:' என்பதால் கலிவர்ஜ்ய ப்ரகரணத்தில் சொல்லப்பட்டது. இதைப்போல் ஆபஸ்தம்பாதிகளும் சில குறிப்பிட்ட பாபங்களில் ப்ராயச்சித்தம் செய்து கொண்ட பிறகு அவனுக்கு சுத்தி உண்டாயினும் அவனுடன் ஸம்வ்யவஹாராதிகள் கிடையாதென்று, 'நாஸ்யாஸ்மிம்ல்லோகே ப்ரத்யாபத்திர் வித்யதே கல்மஷம் து நிர்ஹண்யதே ॥' என்கிறதால் சொல்லியிருக்கிறார். ஆகையால் ஏதோ சில குறிப்பிட்ட பாபங்களில் தவிர மற்றவைகளில் ஸம் வ்யவஹாரத்தை ஸ்ம்ருதிகள் தடுக்கவில்லையென்பது நிச்சயம்.

புத்தி பூர்வமாகச் செய்யப்பட்ட க்ரூரமான பாபத்துக்கு ப்ராயச்சித்தமே கிடையாதென்று சொல்லப்பட்டிருப்பதைக் கொண்டு அதில் ஸம்வ்யவஹாரம் கிடையாதோவென்று ஸம்சயிக்க இடமில்லை. அவ்விஷயத்தில் ப்ராயச்சித்தம் உண்டென்பது கீழே ப்ரமாணங்களுடன் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. புத்தி பூர்வகமான சில மஹா பாபங்களுக்குத்தான் ப்ராயச்சித்தம்



கிடையாதென்பது, 'காமதோ ப்ராஹ்மணவதே நிஷ்க்ருதிர் ந விதீயதே ।' என்பதால் சொல்லப்பட்டது. இங்கும் ப்ராயச்சித்தம் கிடையா தென்பதற்கு (வேணுமென்று ப்ராம்மணவதம் செய்வதற்கு கிடையாது) என்று பாராசர மாதவீயத்தில் ஓர் வ்யவஸ்தை சொல்லப்பட்டதைக் கவனிக்கவேண்டும்.

அதாவது, ப்ராயச்சித்தத்துக்கு இரண்டு ப்ரயோஜநங்கள் சொல்லப்பட்டனவல்லவா? கிடையாதென்று சொன்ன ரிஷிகளுக்கு பராயச்சித்தம் செய்து கொண்டாலும் பரலோகத்தில் நரகம் நிவர்த்தி யாகாதென்பதில் மட்டும் தாத்பர்யமே தவிர ப்ராயசித்தமே செய்துகொள்ளக் கூடாதென்ப தல்ல. உண்டென்று சொல்லியவர்களுக்கு நரகம் போகாத போனாலும் இந்த லோகத்தில் ப்ராயச்சித்தத்தினால் ஸம்வ்யவஹாரம் ஏற்படத் தடை இல்லை யென்பது தான் அபிப்ராயம்.

'காமக்ருதபாபே ப்ராயச்சித்த விப்ரதிபத்தௌ நிர்ணய: தத்ர ப்ராயச்சித்தாபாவ வாதிநாம் முநீநாம் நரக நிவாரணாபாவே தாத்பர்யம் । ஸத்பாவ வாதிநாம் து வ்யவஹார ஜநநீ சக்திரபிப்ரேதா । அத ஏவ ப்ராயச்சித்தேந ஸஹ லோகே வ்யவஹார: ஸித்யதி ।' என்னும் மாதவீய வசனங்களினால் விளக்கப்பட்டிருக்கிறது. புத்திபுர்வக மஹா பாதக விஷயமே இப்படியானால், புத்திபூர்வகமாக மதப்ரஷ்டனு யிருந்தவனுக்கும் இந்த லோகத்தில் பராயச்சித்தமும் ஸம்வ்யவஹாரமும் உண்டென்பது தானே விசதமாயிற்று. இவ்விஷயங்களை மனதில் கொண்டுதான், 'க்ருத நிர்ணேஜநாம்ஸ்சைவ ந ஜுகுப்ஸேத கர்ஹிசித் ।' என்பதால் மநுவானவர் பராயச்சித்தத்தால் சுத்தி அடைந்தவர்களைக் கண்டு ஒருக்காலும் ஜுகுப்ஸை (வெறுப்பு) அடையக்கூடாதென்று விதித்தார்.

இவ்வாறு புத்திபூர்வகமாகவோ தவறுதலாகவோ மதப்ரஷ்டர்கள் விஷயத்தில் ஸ்ம்ருதிகள் பொதுவாயும் தனியாகவும் ப்ராயச்சித்த ஸம்வ்யவஹாராதிகளை விதித்திருப்பதைச் சுருக்கமாய் வெளியிடப்பட்டது. இவ்விஷயத்தில் அபிப்ராயபேதம் உள்ளவர்கள் கூட இதை நன்றாகப் பராமர்சித்துக் குணதோஷங்களை வெளியிடுவதுடன் அபிப்ராய பேதங்கள் உள்ள இடங்களையும் ஸமரஸமாகச் சர்ச்சைசெய்து நிர்ணயித்துக் கொள்வது மிகவும் ஆவசியகமானது. 'தேசிகாசாரவிச்சேதகாரிதா நிஷ்க்ருதிஸ்ஸதா । ஸாமாந்யஸம்ஸ்தா சாஸ்த்ரவசஸாம் ஸாம்ப்ரதம் க்வசித் ॥ இதி வீரராகவோத்தம்ஸ: ஸந்தநோதி யதாமதி ॥'

ஸ்ரீ꞉.

# கோபத்தைப் போக்கும்வழி.

(ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உ. வே. ரகுநாதாசார்யர்.)

உலகத்தில் பெரும்பாலும் ஒருவருக்கொருவர் ஒற்றுமை இல்லாததால் அநேக தீங்குகள் நேரிடுகின்றன வென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதற்குக் காரணம் ஒருவருக்கு ஒருவர் மனஸ்தாபப்படுகிறதுதான். மனஸ்தாபத்துக்குக் கோபம் காரணமாகிறது. கோபத்தினுல் விளையும் தீங்குகளை ஸ்ரீகீதாசார்யன், "க்ரோதாத் பவதி ஸம்மோஹ꞉ ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம꞉ । ஸ்ம்ருதி ப்ரம்ஶாத் புத்தி நாஶ꞉ புத்தி நாஶாத் ப்ரணஶ்யதி ॥" என்று அருளிச்செய்தார். (கீ. 2 - 26). அதாவது, கோபமானது ஆசையினுலுண்டாகிறது. காமம் அல்லது ஆசை ஒன்றை வேண்டுமென்று அபேக்ஷித்து அதில் ருசியைபத்தடுக்க முடியாமலிருக்கும் தசை. அந்த நிலைமையில் அபேக்ஷித்த விஷயம் கிட்டாவிட்டால் பிறர் அதற்குக் காரணமென்று அவர்களிடத்திலும் அருகிலிருக்கும் வஸ்துக்களிடத்திலும் கோபமுண்டாகிறது. கோபத்தினுல் புத்திமயக்கமும், அம்மயக்கத்தால் ஞாபகத்தவறுதலும், அதனுல் அறிவிழவும், முடிவில் தன் நாசமும் வரிசையாய் ஸம்பவிக்கின்றன—என்றபடி. இதை நிவர்த்திக்கும் வழி எப்படி என்பதை விசாரிப்போம்.

ஸாதாரணமாய் ஒருவரை ஒருவர் தூஷிப்பதால் மனஸ்தாபம் உண்டாகிறது; தூஷணவிஷயம் நிஜமாயாவ திருக்கவேண்டும்; அல்லது பொய்யாயிருக்க வேண்டும். நிஜமாயிருந்தால் அதைப்பற்றி மனஸ்தாபப்படக் காரணமில்லை. ஏனென்றுல், சொல்லுகிறவன் உண்மையைச் சொல்லுகிறுன், அதினுல் அவன்பேரில் கோபிக்கக்கூடாது என்று அமரிக்கை உண்டாகவேண்டும். பிறர் சொல்லும் வார்த்தை பொய்யாயிருந்தால் அந்தச்செய்கை நம்மிடத்தில் இல்லாததினுல் அது நமக்கு ஸம்பந்தமில்லை யென்று விலகியிருக்க வேண்டும். இப்படியிருந்து விட்டால் பிறர் சொல்லும் எவ்விதமான கடூரவார்த்தைகளிலும் கோபம் ஜநிக்காது. ஆனுல் இப்பேர்ப்பட்ட யோஜனை ஒருவர் தூஷிக்கும் பொழுது தோன்றுமா என்கிற கேள்வி உண்டாகலாம். அது நம்மைபற்றி கொஞ்சம் யோஜிக்காம லிருப்பதினுல் உண்டாகிற கார்யம். அந்த யோஜனை எப்படி என்றுல்,—எல்லா சேதனுசேதனங்களுக்கும் சேஷியாய் ஸர்வரக்ஷகனுய் ஸ்ரிய꞉பதியாயிருக்கும் ஸ்ரீமந்நாராயணன் ஒருவர் இருக்கிறுர்; அவர் ஸங்கல்ப மில்லாமல் துரும்புகூட அசையமுடியாது (தேந விநா த்ருணாக்ரமபி ந சலதி). ஆகையால் உலகத்தில் நடக்கும் நன்மை, தீமை எல்லாம் நம்முடைய க்ஷேமத்திற்காகவே அவர் ஸங்கல்பிக்கிறுர்; என்று இப்படி யோஜனை செய்தால் பிறர் சொல்லும் வார்த்தையில் மனஸ்தாபம் வர ஹேதுவில்லை. இந்த நினைவை, ஒழிந்த வேளைகளிலெல்லாம் அப்ய



ஸம் பண்ணவேண்டும். அந்த நினைவு வந்த உடன் இனி ஏற்படும் ஸம்பாஷணையில் வரக்கூடிய கடூரவார்த்தையில் நாம் ஜாக்கிரதையா யிருந்து கோபித்துக்கொள்ளக் கூடாதென்கிற அபிஸந்தி ஏற்படும். அப்படியே தினந்தோறும் கொஞ்சங் கொஞ்சமாய் அநுபவத்தில் கொண்டுவந்தால் அது மனதிற்கு அளவில்லாத ஆஹ்லாதத்தைக் கொடுக்கும். தவிர அந்த அப்பியாஸத்தைப் பிறருக்கு சொல்லவும் தோன்றும். இப்படி ஒவ்வொருவரும் மற்றவரைப்பார்த்து கவனித்து ஒழிந்தபோது தன்னைப்பற்றிய சிந்தை உண்டாகி யோஜித்து வந்தால் கோபம் அடியோடு நாளடைவில் சாந்தி அடையும் என்பது நிச்சயம்.

கோபம் இல்லாவிட்டால் மனதுக்கு ஆனந்தமும் உண்டாகிறது. அதினுல் சகல கார்யங்களும் சாதகமாகின்றன. இந்த அப்யாஸம் ப்ரயோஜனப்படாது என்று அலக்ஷிய புத்தி பண்ணுமல் எல்லோரும் அநுஷ்டிக்கத்தகுந்தது. ஏனென்றுல், இவ்விஷயம் ஒரு பெரிய மஹான் வெகுகால பரிசயத்தினுல் அனுபவித்து அவரால் நாம் உபதேசிக்கப்பெற்றது. ஆகையால் இதை அப்யாஸத்திற்குக் கொண்டு வர ஒவ்வருவரும் ப்ரயத்தனம் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேம். சப்பாத்திக்கள்ளியை வெட்ட வெட்ட எப்படித் துளுக்குமோ அது போல எவ்வளவு உபதேசத்தைப் பெற்றுலும் நமது குணம் மாறுகிறதில்லை யென்று ஆலஸ்யம் செய்யாமல் இதுமாதிரி யோஜனையை அநுஷ்டித்து வாவேண்டும். அப்படிச் செய்தால் வேர்களைந்த கள்ளி எப்படித் தலையெடுக்காதோ அப்படியே கோபமும் தலையெடுக்காது.

இத்தகைய விஷயங்களை அனுபவித்துப் பிறருக்கு உபதேசிக்ககூடிய மஹான்களும் ஸதாசார்யர்களும் குறைவாய் விட்டபடியால் நம்மவர்கள் ஒருவருக் கொருவர் ஒற்றுமை யில்லாம லிருக்கிறுர்கள். உலகத்தில் சொல்லுகிறவர்கள் இல்லையா, கேட்டு அநுஷ்டிக்கிறவர்களில்லையா, என்றுல், 'அப்ரியஸ்ய ச பத்யஸ்ய வக்தா ஶ்ரோதா ச துர்லப꞉' (ஹிதம் பிரியமாகவேயிராது; அதை சொல்லுகிறவர்களும், கேட்கிறவர்களும் அபூர்வம்) என்னப்பட்டது. ஹிதம் அப்பிரியமாயிருந்த போதிலும் எப்படி உபதேசித்தால் பிறர் கேட்டு அநுஷ்டிப்பார்களோ அப்படி உபதேசிக்கும் மஹான்களான ஸதாசார்யர்கள் துர்லபராய் விட்டார்கள். எது ஹிதமென்பதை மனம்தெளியும்படி உபதேசித்து அநுஷ்டிப்பவர்களிடம் கேட்பவர்கள் அப்படியே நடப்பார்கள் என்பது நிச்சயம். ஆகையால் தம்மிடம் கோபமிருக்கிறதை அறிந்து அதை நிவர்த்திக்க வேண்டுமென்று சிந்திப்பவர்கள், தயாசீலரான ஆசார்யரைக் கிட்டி அவருபதேசத்தினுல் விவேகம் பெற்று ஸர்வ அநர்த்தங்களுக்கும் காரணமான கோபமென்னும் மஹா வைரியை ஒழிப்பதே தருமமென்று எத்தனிக்கக் கடவர்கள்.

# பத்ரிகா விமர்சம்

**கம்பநாடர் - காரைக்குடியில் ஸ்ரீமான் உ. வே. மோ. வே. கோவிந்தராஜையங்கார் ஸ்வாமியால் மாதாந்தமாகத்தமிழில் வெளியிடப்படும் ராமாயண ஸஞ்சிகை.** இதன் முதல் ஐந்துஸஞ்சிகைகள் நமது பார்வைக்கு வந்திருக்கின்றன. இதுதமிழ்க்கவி சிரோமணியாகிய கம்பர் இயற்றிய ராமாயணத்தை ப்ரசாரம் செய்வதற்கென்றே உத்தேசிக்கப்பட்ட பத்ரிகை. மூலம் கம்பராமாயணம் பொழிப்புரையுடனும் ஆசிரியரின் குறிப்புகளுடனும் (notes) க்ரமமாக ஒருபாகமாகவும், செய்யுள்களை யொட்டிய வசநரூபமாக ஷேராமாயணம் ஒருபாகமாகவும்,வால்மீகிராமாயணத்துக்கும் கம்பராமாயணத்துக்கும் உள்ள ஒற்றுமை வாசிகளைச் சீர்தூக்குவது ஒருபாகமாகவும், கம்பராமாயணத்திலுள்ள அருமையான விஷயங்களைப்பற்றிய ஆராய்ச்சி (research) ஒருபாகமுமாக இப்பத்திரிகை வெளியிடப்படுகிறது. இதைவாசிப்பவர்களுக்கு இவ்வாசிரியரின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையும்,இனிய எளிய தமிழ்நடையும், வடமொழியின் பரிசயத்தால் இவர் புலமைக்கு உண்டாயிருக்கும் பரமோபகாரமும், இவையெல்லாம் அமைந்து ஒரு ஆசிரியர் இத்தகைய பத்ரிகையை நடத்துவதின் பயனைத் தமிழரடையும் ப்ரயோஜநமும் நன்ருய் விளங்கும். இதை ஆதரிக்கவேண்டியது தமிழபிமானிகளின் கடனே.

இந்த அவசரத்தில் நமது அபிப்ராயமொன்றை மட்டும் நாம் சொல்லாமலிருக்க முடியவில்லை. ஆராய்ச்சிக்காரர்களுடைய தீர்மானங்கள் பலபடி யிருப்பினும், சடகோபரந்தாதி பாடி, ஸ்ரீமந்நாதமுனிகளின் அங்கீகாரத்தைப்பெற்று, ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் ஸ்ரீமத்ராமாயணத்தை அரங்கேற்றிய கம்பர் வைணவரன்றி,வேருவது அஸம்பாவிதம்.ஆதி கவியான வால்மீகியைப்பின்பற்றுவதாய் ஸங்கல்பித்த கம்பர்,ஞானவாஸிஷ்டம், முதலிய பிற்பாடாக உண்டாக்கப்பட்ட புறச்சமயிகளின் கற்பனைகளை எவ்விதத்திலாவது பின்பற்றினுரென்ன வொண்ணுது; எங்காவது அப்படி அநுஸரித்திருப்பதாகவும் காணேம். பரதத்துவம் ஸ்ரீவிஷ்ணுவேயென்று நிரூபிப்பதிலேயே இப்படிச்செய்பவருக்கு 'மூர்த்தித்வேஷ' மிருக்கிறதென்ருவது, கம்பர் தமது ராமாயணத்தில் மும்மூர்த்திகளையும் பரதேவதைகளாகவே பாவித்திருக்கிருரென்ருவது சொல்லமுடியாது. அப்படிப் பொருள் கொள்ளின்,அவருக்கு ஸ்ரீமந்நாதமுனிகளின் ஸம்பந்தம்ப்ரயோஜநப்படவில்லை யென்றும் சாஸ்த்ரநிஷ்கர்ஷ மில்லை யென்றும்,கொள்ளவேண்டிவரும்.'ஸ்ரீமந்நாதமுனியாழ்வாராகிய ஸ்ரீவைஷ்ணவஆச்சாரியர் காலத்தில் விஷ்ணுமூர்த்திக்கே பரத்வத்தை நிர்ணயித்து மூர்த்திகட்குள் பேதங்காட்டி வாதிக்கும் வழக்கம் பரந்திருந்ததாகத் தெரியவில்லை. வைணவ ஆசாரியர்களுக்குட் சிறந்தவராயும் வைணவ ஸமயத்தை வேருன்றச்செய்தவராயும் வைணவமதம் மிகஉந்நதநிலையிலிருந்த காலத்திருந்த ஸ்ரீவைஷ்ணவ மதஸ்தாபநாசார்யராகிய ஸ்ரீராமானுஜர்க்குப் பிறகே, மூர்த்திபேதத்திற்கலகந் தோன்றித் தென்னுடு கலங்கியிருந்ததாகத் தெரிகின்றது, என்று இத்தஸ்வாமி வரைந்திருக்கிருர். எந்தஆராய்ச்சியின் பயனுக இப்படித்தெளிந்தாரென்று நமக்குப் புலப்படவில்லை! 'தெளியாத மறை நிலங்களைத்தெளிந்து' விஷ்ணுபரத்வ நிர்த்தாரணம்செய்ய, 'கபால நன்மோக்கத்துக் கண்டுகொண்மின்,' மார்க்கண்டனும் கரியே,' 'தேவனெம் பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே!' 'மற்றுமோர் தெய்வ முளதென்பாரோடு ஒத்திலேன்,' 'ஒற்றைவிடையனும் நான்முகனும் உன்னையறியாப் பெரியோனே,' என்பதுபோன்ற ஆழ்வார்களின் எண்ணிறந்த திவ்யஸூக்திகளே வைணவர்களுக்கு உசாத்துணையாகின்றன. இவற்றை வெகு ப்ராயாஸத்தின்பேரில் ஸ்ரீமந்நாதமுனிகள் கண்டெடுத்து ஒழுங்குசெய்து 'தாளம் வழங்கி' யனுபவித்து ப்ரவர்த்திப்பித்தார். ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீபாஷ்யகாரருக்கு நியமித்த மூன்று கட்டளைகளில் ஸம்ப்ரதாயப்ரவர்த்தனம் ஒன்று. இவற்றையெல்லாம் ஸம்ப்ரதாயமறிந்த ஸ்ரீவைஷ்ணவரறிவார்கள். ப்ரமாணததிகள் இருப்பதை மட்டும் இங்கு ஸூசிப்பித்திருக்கின்ருேம்; இப்படிப்பட்டவிஷயங்களை விரிக்க இது இடமல்ல. நமது ஆசிரியர் ஸ்ரீவைஷ்ணவரானது பற்றி இம்மட்டிலாவது அபிப்ராய பேதங்களைக் குறிப்படவேண்டியதும் நமதுகடமையாயிற்று.இதை அவரும் வேறுவிதமாக நினைக்கமாட்டாரென்று நம்புகிருேம். பலசமய மதிகளினுல் கலங்கும் இக்காலத்தவருக்கு நம்பூர்வரைப்பற்றி. அறிஞரென்போர் ஒன்றை உறைப்பதன் முன் பதின்மடங்காகத் தமது பொறுப்பை கவனிக்கவேண்டுமென்பதே நாம் பொதுவாய்ச் செய்யும் விண்ணப்பம்.

இப்பத்ரிகை அச்சிடப்பட்டிருக்கும் மாதிரியில் ஒருகுறைவுமில்லை. இதன் அபிவ்ருத்தியை நாம் நன்ருய் ஆசாஸிக்கின்ருேம்.

பத்ராதிபர்.



ஸித்³தி⁴ரிதி, தத³பி விசாரணீயம் | கிம் உக்தஸ்யைவ விதி⁴வாக்யஸ்ய ஸித்³தி⁴:? உத விநியுக்தஸ்ய? யத்³வா விநியுக்தஸ்யைவ மந்த்ரோக்தஸ்ய? ந ப்ரத²ம: — ப்ரத்யக்ஷாநுவாத³விஷயஶக்தீநாம் உக்தாநாம் விதி⁴வாக்யஸ்ய மீமாம்ஸகைரேவ ஸ்வீக்ருதத்வாத் | 'வஸந்தாய கபிஞ்ஜலாநாலப⁴தே' இத்யாதி³ஷு உக்தஸ்ய விதி⁴வாக்யஸ்ய ச வர்ணிதம் மீமாம்ஸகாசார்யை: | ந த்³விதீய: — 'யம் யம் க்ரதுமுத்³தி³ஶ்ய தேந தேநாபேக்ஷிதம் ப⁴வதி' இதி தத்தத் க்ரதுஸம்ப³ந்த⁴ஸ்ய ஸம்ப்ராப்தஸ்யைவ ஜபாத்⁴யயநவிநியோக³ஸ்யாபி ப்³ராஹ்மணபா⁴க³ஸ்ய தத்³விதி⁴வாக்யத்வாபா⁴வாத் | அந்யதா² க்ரதுஷ்வநாபேக்ஷிதத்வப்ரஸங்கா³த் | ந ச த்ருதீய: — விநியுக்தஸ்ய உக்தஸ்ய ச த்³வயோரபி விதி⁴ஶக்தி விரோதி⁴த்வாபா⁴வே ஸமுச்சிதயோரபி தயோர்விரோதி⁴த்வே

---

கொள்ளப்பட்டிருப்பதினுல் அப்படி விநியோகம் சொல்லப்பட்டிருக்கிற மந்திரங்களில் விதிக்கிறதென்பது பொருந்தாதாகையினுல் உன் இஷ்டம் ஸித்திக்கவில்லை என்று சொல்லப்பட்டதே, அதையும் பற்றி விசாரிக்கவேண்டும். மந்திரமாக இருப்பதினுல் மாத்திரம் அவைகள் விதியைச்சொல்லும் என்பது ஸித்திக்காதா? அப்படிக்கல்லாமல் ஒரு கார்யத்தில் விநியோகிக்கப்பட்டிருப்பதினுலா? விநியோகிக்கப்பட்டும் மந்திரமாயும் இருப்பதினுலா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல, 'யத் (எந்த)' என்றிவை முதலிய பதங்களினுல் தடுக்கப்பட்ட விதிக்கக்கூடிய ஶக்தியைஉடைய மந்திரங்களும் விதியைச்சொல்லுகின்றன என்பது மீமாம்ஸகர்களினுலேயே அங்கீகரிக்கப்பட் டிருப்பதினுல். 'வஸந்தன் என்கிற தேவதையைக் குறித்து கபிஞ்சலம் என்கிற பசுவைக் கொண்டு யாகம் செய்யவேண்டும்' என்றிவை முதலிய வாக்யங்களில் மந்திரமாக இருக்கையும் விதியைச்சொல்லும் ஶக்தியும் உண்டென்று மீமாம்ஸகர்களுடைய ஆசார்யர்களினுலேயே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல, 'எந்தெந்த யஜ்ஞங்களைப்பற்றிய வேதபாகங்களை அத்யயனம் செய்கிருனே, அவனுல் அந்தந்த யாகங்கள் செய்யப்பட்டதாகிறது' என்று அந்தந்த யஜ்ஞங்களினுல் உண்டாக்கப்படுகிற பலங்களுக்கு ஸமமான பலத்தை அடைவதற்காக ஏற்பட்ட ஜபம், அத்யயனம் இவைகளில் விநியோகிக்கப்பட்ட ப்ராம்மண (விதியைச் சொல்லும்) பாகத்திற்கு அந்தந்த யஜ்ஞங்களை விதிக்கும் தன்மை போகவில்லையாதலால். அப்படிக்கில்லாவிடில் (போய்விடுகிறதென்று ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில்)அந்தந்த யஜ்ஞங்களுக்கே ப்ரமாணம் இல்லாமல் போகவேண்டி வருமாதலால். மூன்ருவது பக்ஷமும் உசிதமல்ல, விநியோகிக்கப்பட்டதா யிருக்கை மந்திரமாக இருக்கை இவை இரண்டும் விதிக்கிற ஶக்திக்கு விரோதிகளல்ல என்று ஏற்பட்டால் ஒன்று



18673

ப்ரமாணாபாவாத் | விநியுக்தாநாம் மந்த்ராணாம் விதி பரத்வம் ந த்ருஷ்டமிதி சேத், ந — 'வஸந்தாய கபிஞ்ஜலாநாலபதே' இத்யஸ்யைவ க்ருத்ஸ்நவேதஜபாதிஷு கர்மஸு விநியுக்தஸ்ய மந்த்ரஸ்யாபி விதிபரத்வஸ்வீகாராத் | உக்தம் ச பகவதா ஶௌநகேந — 'ஶௌநகோஹம் ப்ரவக்ஷ்யாமி நித்யம் விஷ்ண்வர்சநம் பரம் | ப்ர வ: பாந்தமந்தஸோ தீத்ய்ருசா ச விதாநத: ||' — இதி |

'ப்ர வ: பாந்தமந்தஸோ தியாயதே மஹே ஶூராய விஷ்ணவே சார்சத' இத்யயம் மந்த்ரோ ஹி த்வாதஶாஹே ஶஸ்த்ரதயா அச்சாவாகேந விநியுக்த: | யேஷு து மந்த்ரேஷு விதி பரத்வம் ந த்ருஶ்யதே தேஷ்வபி ந விநியுக்தத்வேந மந்த்ரத்வேந தத்ஸமுதாயேந வா விதிபரத்வபங்க: |

சேர்ந்திருக்கிற அவைகளுக்கும் அதற்கு விரோதியென்பதில் ப்ரமாணம் இல்லாமையினால். விநியோகிக்கப்பட்ட மந்திரங்களுக்கு விதியைச் சொல்லக் கூடிய ஶக்தி காணப்படவில்லை என்னில், அதுவும் உசிதமல்ல, 'வஸந்தனின் பொருட்டு கபிஞ்ஜலங்களைக் கொண்டு யாகம் செய்யவேண்டும்' என்கிற மந்திரம் எல்லா வேதங்களையும் ஜபம் செய்வது முதலிய கர்மங்களில் விநியோகிக்கப்பட்டதாயும் மந்திரமாயும் இருந்தபோதிலும் விதியைச் சொல்லுகிறது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதினால். பகவானாகிய ஶௌநகராலும் 'ஶௌநகராகிய 'நான் உங்களை அந்தகாரத்தில் இருந்து ரக்ஷிக்கிற' என்றர்த்தமுள்ள பாதி ரிக்கு விதித்திருக்கிறபடியினால் தினந்தோறும் செய்யவேண்டியதாகிய உயர்ந்ததான விஷ்ணுவின் ஆராதனத்தைப் பற்றிச் சொல்லப்போகிறேன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த ரிக்காவது 'நெருக்கமான அஜ்ஞானமாகிய இருட்டில் இருந்து உங்களைக் காப்பாற்றுகிற எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாயும் ஈஶ்வரனாயும் இருக்கிற விஷ்ணுவை அர்ச்சனம் செய்யுங்கள்'* என்பது. இந்தப் பாதி ரிக்குப் பனிரண்டு நாள் செய்யக்கூடிய ஸத்ரயாகத்தில் அச்சாவாகர் என்கிற ரித்விக்கினால் சொல்லவேண்டிய மந்திரமாக விநியோகிக்கப்பட்டிருக்கிறது. எந்த மந்திரங்களில் விதியைச்சொல்லக்கூடிய தன்மை காணப்படவில்லையோ அவைகளிலும் வேறு கர்மங்களில் விநியோகிக்கப்பட்டிருப்பதினாலாவது, மந்திரமாய் இருப்பதினாலாவது இரண்டும் சேர்ந்திருப்பதினாலாவது விதியைச்சொல்லும் தன்மை இல்லாமல் போகவில்லை.

* இதில் விபக்தி மாறி இருப்பது வேதமாகையினால் உபபந்நம் என்றறியத்தக்கது.



கிந்து அநுவாதலிங்கப்ராப்தார்த்தாபிதாயகத்வாதிபி: | ந சைவம் அந்யேஷ்வபி மந்த்ரேஷு தைரேவ விதிபரத்வாபாவ: ஸ்யாத் | ஸர்வாநுவாதலிங்கஸங்கோசகஸ்ய ப்ராப்தார்த்தாபிதாயகஸ்ய விரோதகத்வாத் 'யதாக்நேயோऽஷ்டாகபால: உபரிஷ்டாத் தேவதாப்யோ தாரயதி' இத்யாதிஷு அபூர்வத்வாத் பகவாந் ஜைமிநி: — 'வசநாநி த்வபூர்வத்வாத் விதிஸ்து தாரணேऽபூர்வத்வாத்' — இதி ச | ஸூத்ரம் ச பகவாந் பாதராயண: — 'விதிர்வா தாரணவத்' இதி | 'தக்ஷிணே து புஜே விப்ர:' இத்யத்ர 'பிப்ருயாத்' இதி விதிரேவ ப்ரதீயதே | அயமஸ்யார்த்த: — விப்ர: ப்ராஹ்மண:, பகவச்சிஹ்நபூதம் ஸுதர்ஶநம் ஶங்கம் ச பிப்ருயாத், ததா ஸதி ஹி விப்ரஸ்யாநுரூபம் க்ருதம் பவதீதி பாவ: | 'விஷ்ணும்

பின்னை எதினால் என்னில், அனுவாதம் செய்கிறது என்பதற்கு அடையாளங்கள், வேறொன்றினால் ஏற்பட்ட அர்த்தத்தையே சொல்லுவதாயிருக்கை முதலிய காரணங்களினால். கீழ்க்கூறிய மந்திரங்களிலும் இந்தக் காரணங்களினாலேயே விதியைச் சொல்லக்கூடியதாயிருக்கும் தன்மை இல்லாமல் போகட்டுமே என்பதும் உசிதமல்ல, அனுவாதம் செய்கிறது என்பதற்கு அடையாளங்களான (வை, கலு, முதலிய பதங்கள்) எல்லாவற்றையும் நிவ்ருத்தி செய்யக்கூடிய வேறு ப்ரமாணங்களினால் ஏற்படாத அர்த்தத்தைச் சொல்லுவதாயிருக்கும் தன்மை கீழ்க் குறித்த மந்திரங்களில் இருக்கிறபடியினால். 'அக்னி தேவதையை உத்தேசித்ததான எட்டுக் கபாலத்தில் செய்யப்பட்டதான எந்தப்புரோடாசம் செய்யப்படுகிறதோ, தேவதைகளின்பொருட்டு மேலேயல்லவோ வைக்கிறான்' என்றிவை முதலிய வாக்யங்களைப் பற்றிப் பகவானாகிய ஜைமினி 'இந்த வாக்யங்கள் புதிதான விஷயத்தைச் சொல்லுகிறபடியினால் விதி வாக்யங்களே யாகும், அப்படியே தாரணத்திலும் வேறொரு ப்ரமாணத்தினால் ஏற்படவில்லையாதலால் அதுவும் விதிவாக்யமே' என்று ஸூத்திரம் செய்திருக்கிறார். பகவானாகிய பாதராயணரும் 'தாரணத்தில் சொல்லி இருப்பதைப் போல் இந்த வாக்யமும் விதிதான்' என்று வேறொரு வாக்யத்தைப் பற்றி இத்தை உதாஹரணமாகக் காட்டி இருக்கிறார். 'ப்ராம்மணன் வலதுகையில்' என்று ஆரம்பிக்கும் ஶ்லோகத்தில் 'பிப்ருயாத் (தரிக்க வேண்டும்)' என்று விதியே ஸ்பஷ்டமாகப் ப்ரகாசிக்கிறது. அந்த ஶ்லோகத்தின் அர்த்தம் இது. விப்ர: -ப்ராம்மணன், பகவானுக்கு அடையாளமாகிய சக்கரத்தையும் சங்கத்தையும் தரிக்கவேண்டும், அப்படிச் செய்தானாகில் ப்ராம்மணனாயிருப்பதற்குத் தகுந்த கார்யம் செய்யப்பட்டதாகிறது. 'உலகங்களை அளந்த விஷ்ணுவென்று பெயருடைய வாஸுதேவனை அறிந்த

க்ராஹம் வாஸுதேவம் விஜாநந் விப்ரோ விப்ரத்வமச்நுதே தத்வதர்சீ' இதி வசநாத் தஸ்ய தத்வதர்சித்வம் ஸித்தம் | ததச்ச ஸர்வாந்தராத்மபூதம் ஸர்வசேஷிணம் வாஸுதேவம் விசேஷதோ யதாவஸ்திதம் ஜாநந் ப்ராஹ்மண: ஸ்வாத்மந: சேஷத்வாநுரூபம் சேஷிணோ வாஸுதேவஸ்ய சிஹ்நம் சங்கம் சக்ரம் ச பிப்ருயாதிதி வேதவித்ஸித்தாந்த இதி | ப்ரஹ்மசப்தேந பரப்ரஹ்ம விவக்ஷாயாமபி ஸித்தோயமேவார்த்த: | அஸ்ய சைவ காமசோதநாயாமி நிமித்தவிதிப்ராப்தத்வாத் நித்யத்வம் ஸித்தம் | விப்ர இதி நிர்தேசேநைவ நியோஜ்யாகாங்க்ஷாசமநாத், நியோஜ்யாந்தரகல்பநாநவகாச: | யத்யபி பாவோஸ்யோபாஸநாங்கத்வம் ச்ருத்யந்தரே ப்ரதீதம், ததாபி ஜ்யோதிஷ்டோமாதீநாமிவ நித்யத்வேபி ந விருத்யதே, விநியோகபேதாத், உபவீதாதிவத் இதி ஹி ஸ்ம்ருதி | பாஞ்சராத்ராதௌ காலவிசேஷாதிகேபி ந நித்ய

ப்ராம்மணன் தத்வத்தை அறிந்தவனாகையால் ப்ராம்மணனாயிருக்கும் தன்மையை அடைந்தவனாகிறான்' என்று வசனம் சொல்லி இருப்பதினால் ப்ராம்மணன் உண்மையான தத்வத்தை அறிந்தவன் என்பது ஸித்தமாயிற்றல்லவா. ஆதலால் எல்லாவற்றிற்கும் உள்ளே இருக்கும் ஆத்மாவாயும், எல்லாவற்றிற்கும் ஸ்வாமியாயும் இருக்கிற வாஸுதேவனை விசேஷமாக உண்மையாக அறிந்த ப்ராம்மணன் தான் சேஷமாக இருப்பதற்கு அனுகுணமான ஸ்வாமியாகிய வாஸுதேவனுடைய அடையாளமாகிய சங்க சக்கரத்தைத் தரிக்க வேண்டுமென்று வேதத்தை அறிந்தவர்களின் நிச்சயம். ப்ரும்ம என்னும் பதத்தினால் பரப்ரும்மம் சொல்லப்படுகிறது என்று அங்கீகரித்த போதிலும் கீழ்ச்சொன்ன அர்த்தமே ஏற்பட்டது. இது ஒரு பலத்தில் ஆசையைக் காரணமாகக் கொண்டு ஏற்படாத விதியினால் ஏற்பட்டதினால் நித்யம் என்பதும் ஏற்பட்டது. 'விப்ர:' என்று சொல்லி யிருப்பதினாலேயே இந்த விதி யாரைக் குறிக்கிறதென்கிற கேள்விக்கு ஸமாதானம் ஏற்பட்டுவிட்ட படியினால் வேறொரு அதிகாரியைக் கல்பிக்கவேண்டிய அவச்யமில்லை. இது உபாஸனத்திற்கு அங்கம் என்பது வேறொரு ச்ருதியில் சொல்லப் பட்டிருக்கிறது. அப்படி இருந்தபோதிலும் ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்கள் போல நித்யமென்பதும் விருத்தமாகாது, விநியோகம் வெவ்வேறாக இருப்பதினால், யஜ்ஞோபவீதம் முதலியவைகளைப் போல. என்றல்லவோ ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. பாஞ்சராத்திர சாஸ்திரத்தில் சில காலவிசேஷங்கள் சொல்லி இருப்பதும் நித்யம் என்பதற்கு விரோதியல்ல. எப்படி என்னில்:—உபநயநத்திற்கு எட்டாவது வயதும்



ச விரோத:, பலஸங்கஸ்ய சாபூர்வாதிவத் | 'ப்ராஹ்மணஸ்ய விசேஷேண', 'வைஷ்ணவஸ்ய விசேஷத:' இத்யபி வசநம் ந ப்ராஹ்மணமாத்ரஸ்யாவச்யகர்த்தவ்யதாம் இதரேஷாம் நிஷேதபரம் | அபி து அகரணே ப்ரத்யவாய பாவபரம் | ஸாமாந்யதோ அந்ருதவசநநிஷேதேப்யாஹிதாக்நே: 'தஸ்மாதாஹிதாக்நிர் நாந்ருதம் வதேத்' இதி நிஷேதவசநமாஹிதாக்நேரஸத்யவசநே ப்ரத்யவாய ஆதிக்யம் அந்யஸ்யாஸத்யவசநே ப்ரத்யவாயால்பத்வம் ச ச்ராவயதி | ந த்வந்யஸ்யாஸத்யவசநாநுஜ்ஞாம் | ததேஹாபி | ந ச வாச்யம், தாரணே பலவிசேஷஸ்யோதாஹரிஷ்யமாணாநேக ச்ருதிஷு ச்ருதத்வாத் விதிவாக்யாபேக்ஷிதஸ்ய ச ராத்ரிஸத்ரந்யாயேந வாக்யசேஷ ச்ருதச்ருத்யந்தராதிகல்பிதஸ்ய ஸாதநாயோகேந

வஸந்தருதுவும்* சொல்லி யிருப்பதைப் போல. 'ப்ராம்மணனுக்கு விசேஷித்து சங்கசக்ரதாரணம் செய்து கொள்ள வேண்டும்' என்றும், 'வைஷ்ணவனுக்கு விசேஷித்து சங்கசக்ரதாரணம் செய்துகொள்ள வேண்டும்' என்றும் சொல்லி யிருப்பதும் ப்ராம்மணன் மாத்திரம் அவச்யமாகச் செய்து கொள்ள வேண்டியதாதலால் மற்றவர்களுக்குச் செய்து கொள்ள வேண்டிய தில்லை என்பதைச் சொல்லுகிறதல்ல. பின்னை எதனை யென்னில் மற்றவர்கள் சங்கசக்ராங்கனம் செய்து கொள்ளாவிடில் அல்பதோஷம் உண்டாகும் என்பதைச் சொல்லுகிறது. எப்படி யென்னில்:—பொதுவாக பொய் சொல்லக் கூடாது. என்று மறுக்கப்பட்டிருந்த போதிலும் ஆஹிதாக்னியைப் பற்றி 'ஆதலால் ஆஹிதாக்னியா யிருப்பவன் பொய் சொல்லக் கூடாது' என்று மறுத்திருப்பதும் ஆஹிதாக்னியானவன் பொய் சொன்னால் தோஷம் அதிகம், மற்றவன் பொய் சொன்னால் தோஷம் குறைவானது என்பதைத் தெரிவிக்கிறதேயன்றி மற்றவர்கள் பொய் சொல்லலாம் என்பதை அனுமதி செய்கிறதல்ல. அப்படியே இவ்விடத்திலும். சங்கசக்ராதிகளைத் தரித்தால் பலன் உண்டென்பது மேலே உதாஹரிக்கப்படப்போகிற அநேகம் ச்ருதிகளில் ஏற்பட்டிருப்பதினால் விதிவாக்யத்திற்கு வேண்டியதாயும் மற்ற ச்ருதி வாக்யங்களில் சொல்லப்பட்டதாயும், சில வாக்யங்களில் அவற்றின் மிகுதி பாகங்களில் சொல்லப்பட்டதாயும் இருக்கிற பலத்தை ராத்திரி ஸத்ர ந்யா

* எட்டாவது வயதில் வஸந்த ருதுவில் உபநயனஞ் செய்யவேண்டும் என்று சொல்லி இருந்தபோதிலும் அதி தாண்டிவிட்டால் பண்ணாமல் இருக்கலாம் என்பது கிடையாது, பிறகு எப்பொழுதாவது பண்ணியே ஆகவேண்டும். அதைப்போல என்றபடி.

விஶ்வஜிந்ந்யாயாநவதாராத் காம்யாதிகாரே ச ஸம்பவதி நித்யத்வகல்பநாயோகாத், ‘தக்ஷிணே து கரே விப்ர:’ இதி ஃபலநிர்தேஶரஹிதவாக்யேऽபி ஶ்ருத்யந்தரஸித்தஸ்யைவ ஃபலத்வமிதி உக்தோத்தரத்வாத் | நிராகாங்க்ஷஸ்ய நித்யஸ்ய ச ஸ்வதந்த்ரஸ்ய ஃபலாந்தராபேக்ஷாநியமாபாவாத் | விநியோகபேதாத்து மோக்ஷாதிகாரே நித்யகர்மாங்கவதேவ நிஶ்ஶ்ரேயஸஸாதநோபாஸநஸஹகாரித்வமுபபத்யத ஏவ | அஸ்து வோபாஸநாங்கஸ்வேநாஸ்ய ததேகஃபலத்வம் | ததாபி முமுக்ஷுணா தாவ-

யத்தினல்† விட்டு விடுவது உசிதமல்லவாதலால் விஶ்வஜித்ந்யாயம்‡ இங்கு வராததலும், பலத்தில் ஆசை உடையவனுக்கு சங்கசக்ராதி தாரணத்தில் அதிகாரம் உண்டு என்று சொல்லுவது ஸம்பவித்திருக்க நித்யமென்று கல்பிப்பது பொருந்தாதலால் ‘வலது கையில் ப்ராம்மணன்’ என்றாரம்பித்து பலத்தைச் சொல்லாத வாக்யங்களிலும் மற்ற ஶ்ருதிகளில் ஏற்பட்ட பலனே பலமாக வைத்துக்கொள்ள வேண்டியது என்று ஏற்படுகிறது என்று சொல்லுவது உசிதமல்ல. இதற்கு முன்னமேயே பதில் சொல்லப்பட்டிருப்பதினல்.¶ நித்யம் என்று ஸ்மிருதியில் சொல்லப்பட்டதாயும், ஆகையினலேயே வேறொன்றை எதிர்பாராமல் இருக்கிற கர்மங்களுக்குப் பலத்தை அவஶ்யமாக அபேக்ஷிக்க வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இல்லையாதலால். நித்ய கர்மங்களுக்கு மோக்ஷத்திற்கு அங்கமாக உபயோகம் இருப்பதைப்போல விநியோக பேதத்தினல் மோக்ஷோபாயமான உபாஸனைகளுக்கு ஒத்தாசையாக இருப்பதும் பொருந்தும். உபாஸனத்திற்கு அங்கமாயிருப்பதினல் உபாஸனத்திற்கு எந்தப் பலமோ அதே சங்கசக்ராதி தாரணத்திற்கும் பலம் என்பது இருந்தாலும் இருக்கட்டும். அப்படி இருந்த போதிலும் மோக்ஷத்தில்

† ராத்திரி ஸத்ரம் என்னும் யாகத்தை விதிக்கும் பாகத்தில் பலம் சொல்லப்படாமல் இருந்த போதிலும் அந்த யாகத்தைப் பற்றி ஸ்தோத்திரம் செய்யும் மற்றொரு வாக்யத்தில் ப்ரதிஷ்டை என்னும் பலம் சொல்லப்பட்டிருப்பதினல் அது அந்தப் பலத்திற்கு ஸாதனம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றபடி.

‡ விஶ்வஜித் என்கிற யாகத்தை விதிக்கும் இடத்தில் பலம் சொல்லப்படாமையினல் நிஷ்பலமான கார்யத்தை ஒருவரும் அனுஷ்டிக்கமாட்டார்களாதலால் விதியே வ்யர்த்தமாகும், ஆதலால் பலம் கல்பிக்கவேண்டும், அப்படிக் கல்பிக்கும்பொழுது உத்தமமான பலத்தையே கல்பிப்பது உசிதமாதலால் ஸ்வர்க்கமே பலம் என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது, அதைப்போல இங்கும் மோக்ஷமே பலம் என்று கல்பிக்கலாம் என்றபடி.

¶ யஜ்ஞோபவீதாதிகளைப்போல என்று சொல்லியிருப்பதினல் என்றபடி.



த்வாவஸேகேநாவஶ்யம் கர்தவ்யமிதி ஸித்தம் | அங்காநநுஷ்டாநே அங்கிநோ வைகல்யாத் | அத்ராபி விப்ரவசநம் ந க்ஷத்ரியாதிவ்யவச்சேதாய, தேஷாமபி வசநாந்தரேண விஹிதத்வாத் | யதா ‘அஷ்டவர்ஷம் ப்ராஹ்மணமுபநயீத தமத்யாபயேத்’, ‘யுக்தஶ்சந்தாம்ஸ்யதீயீத மாஸாந் விப்ரோऽர்தபஞ்சமாந்’ இத்யாதிஷு ப்ராஹ்மணவிப்ரஶப்தா ந க்ஷத்ரியாத்யத்யயநநிவாரணாய ப்ரயுக்தா:, க்ஷத்ரியவைஶ்யயோருபநீதயோரத்யயநஸ்ய ஸித்தத்வாத் | ததஸ்து ப்ரக்ருஷ்டாதிகாரித்வாத்ததகரணே ப்ரத்யவாயபாஹுள்யாச்ச விஶேஷநிர்தேஶ: | துஶப்தோऽவதாரணார்த: | தக்ஷிண ஏவ ஸுதர்ஶநம் ஸவ்ய ஏவ ஶங்கமித்யர்த: | யதா தக்ஷிணஸவ்யஶப்தயோரந்யேஷ்வப்யர்தே நியமஸித்தே: ‘ஊருமூலயோ:’ இத்யாதிவாக்யாந்தர ப்ரதிபந்நஹாநிப்ரஸங்காத் விஶேஷணோதநாயாம்ஸ்து

ஆசை உடையவனுய் உபாஸனம் செய்கிறவனல் அவஶ்யம் செய்ய வேண்டும் என்பது ஸித்தித்தது. அங்கத்தை அனுஷ்டிக்காவிடில் அங்கி பூர்த்தியை அடையாததலால். இந்த இடத்திலும் விப்ரன் என்று சொல்லியிருப்பது க்ஷத்ரியாதிகளை விலக்குவதற்காகவல்ல, மற்ற வசனங்களால் அவர்களுக்கும் சங்கசக்ராதி தாரணம் விதிக்கப்பட்டிருப்பதினல். எப்படி ‘எட்டு வருஷமுள்ள ப்ராம்மணனை உபநயனம் செய்ய வேண்டும் அவனுக்கு வேதாத்யயனம் செய்து வைக்க வேண்டும்’, ‘விப்ரன் நாலரை மாதம் ஸாவதானமாய் இருந்து வேதங்களை அத்யயனம் செய்ய வேண்டும்’ என்றிவை முதலிய வசனங்களிலிருக்கும் விப்ரன் ப்ராம்மணன் என்னும் பதங்கள் க்ஷத்திரியன் முதலியவர்களுக்கு அத்யயனம் செய்வதைத் தடுப்பதற்காகச் சொல்லப்பட்டவைகளல்லவோ, உபநயனம் செய்விக்கப்பட்ட க்ஷத்திரியன் வைஶ்யன் இவர்களுக்கும் அத்யயனம் ஸித்தமாயிருக்கிறபடியினல். (அப்படியே இங்கும்). ஆகையினல் ப்ராம்மணன் சிறந்த அதிகாரியாகையினலே அப்படிச் செய்யாவிடில் பாபம் அதிகம் உண்டு. ஆதலால் அவனை இவ்விடத்தில் தனித்துக் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறது. ‘தக்ஷிணே து’ என்னும் வசனத்தில் து என்பது ஏவ என்பதின் அர்த்தத்தைச் சொல்லுகிறது. அதாவது வலது கையிலேயே சக்ரத்தையும் இடது கையிலேயே சங்கத்தையும் தரிக்க வேண்டும் என்றர்த்தம். அன்றிக்கே ‘தக்ஷிணஸவ்ய’ என்கிற பதங்களைப் பிரயோகித்திருப்பது ப்ரயோஜனமற்றது என்பது பொருந்தாதலாலேயே வலது கையிலேயே சக்ரத்தைத் தரிக்க வேண்டும் என்றிவை முதலிய நியமம் ஏற்பட்டு விட்டபடியினல் மற்றும் சில வாக்யங்களில் ஊர்வோ என்று சொல்லப்பட்டகைகளின் ஒருவிதபாகத்தை குறிப்

ஶப்த: | சைவஶப்தேந ப்ரஸித்ததா ஸம்ப்ரதிபத்திரேவ ஸித்தா| ‘ப்ரஹ்மவிதோ விது:’ இத்யபி பரப்ரஹ்மபூதபரமாத்மஸ்வரூப ப்ரதிபாதகவேதவித்ஜந ப்ரஸித்தமேவேதி | ததா கட ஶாகாயாம்— ‘ஊர்த்வபுண்ட்ர:’ இத்யாதி | அத்ரோர்த்வபுண்ட்ராதிவத் சக்ரதாரணஸ்யாபி த்யாநாங்கத்வம் ஸ்பஷ்டம்| அத்ர சக்ரஶப்த: வசநாந்தரவிஹிதஶங்காதேருபலக்ஷணார்த:| வ்யாபநஶீலத்வாத் விஷ்ணு: | தேநாந்தர்யாமித்வோக்த்யா தாத்பர்யாத் ஶேஷித்வம் ஸூசிதம் | ‘பரம் பராத் பரம்’ இத்யநேந பத்தேப்ய: ஸம்ஸாரிப்ய: முக்தேப்யோ(அ)ஸம்ஸாரிப்யஶ்ச வ்யாவ்ருத்தி: | யத்வா பரமிதி கேவலபர்யாய:| விஷ்ணும் கேவலம் த்யாயீதேத்யர்த: | ஸத்யோ ஸத்யாநாம்— ஸ்வரூபதோ குணதோ வா யே ஶ்ரேஷ்டாஸ்தேப்ய உத்க்ருஷ்டவைபவ:

---

டுவதற்காக ‘து’ என்னும் பதம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. ‘சைவ’ என்னும் பதத்தினால் ப்ரஸித்தம் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது ஏற்பட்டது. ‘ப்ரஹ்மவிதோவிது:’ என்பது பரப்ரும்மமாகிய பரமாத்மாவைச் சொல்லுகிற வேதங்களை அறிந்தவர்களின் ஸித்தாந்தத்தில் இது ப்ரஸித்தமானது என்பதைத் தெரிவிக்கிறது. அப்படியே கடஶாகையில் ‘ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்துக்கொண்டு’ என்கிற மந்திரமும் சொல்லப்படுகிறது. இந்த வாக்யத்தில் ஊர்த்வ புண்ட்ரம் முதலியவைகளைப்போல சக்ராதிகளைத் தரிப்பதும் த்யானத்திற்கு அங்கமென்பது ஸ்பஷ்டமாயிருக்கிறது. இந்த வாக்யத்தில் சக்ர என்னும் பதம் மற்ற வசனங்களில் விதிக்கப்பட்ட சங்கம் முதலியவைகளையும் குறிக்கிறது. வ்யாபித்திருப்பதை ஸ்வபாவமாக உடையவனாதலால் விஷ்ணு. இத்தால் எல்லா வஸ்துக்களுக்கும் அந்தர்யாமியாக இருக்கிறான் என்று சொல்லுவதில் தாத்பர்யமாதலால் ஶேஷியாக இருக்கை தெரிவிக்கப்பட்டது. ‘பரம்’, ‘பராத்பரம்’ என்கிற இரண்டு பதங்களினாலும் அசுத்தர்களான ஸம்ஸாரியான ஆத்மாக்களைப் பார்க்கிலும் முக்தர்களான ஸம்ஸாரபந்தம் இல்லாத ஆத்மாக்களைப் பார்க்கிலும் வ்யத்யாஸம் சொல்லப்படுகிறது. அன்றிக்கே ‘பரம்’ என்பது கேவலம் என்பதின் அர்த்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம். விஷ்ணுவை மாத்திரம் த்யானம் செய்யவேண்டும் என்று அர்த்தம். ஸத்யோ ஸத்யாநாம் - ஸ்வரூபத்தினாலாவது குணங்களினாலாவது [illegible]க்கள் சிறந்தவைகளோ அவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் விசே[illegible] மஹிமையை உடையவனாகிய என்றர்த்தம்.

ஸ்ரீ:

## ஸ்ரீமான் வுப்பட்டூர் ஆழ்வார்செட்டியார் அவர்கள் பரமபதமடைந்தது.

சிறிதுகாலம் சரீரம் அஸௌகரியமாயிருந்து நாளது மார்ச்சுமீ 19௳ (பங்குனிமீ 7௳) இரவு 10½ மணிக்கு இந்த மஹான் ஆசார்யன் திருவடிகளை அடைந்தார். இவர் தேஹ வியோகமடைந்தது ஸ்ரீவைஷ்ணவமதாபிமானிகளனைவரும் வ்யஸநிக்கத்தக்கவிஷயம். இவர்தமயனும் இவரும் பால்யத்தில், வ்யாபாரம் ஸ்வல்ப்பமாக இருந்தும் தென்னிந்தியாவிலுள்ள ஸ்டேஷனரி வ்யாபாரிகளில் முதன்மையான அந்தஸ்துள்ளவர்களாக ஆனது இவர்களுடைய ஸ்ரீராமனிடம் அஸாதாரணமானபக்தியும் பாகவத ஆராதனமும் தான். ப்ரதி வருஷம் ரூ 5000 வரை சிலவுசெய்து ஸ்ரீராமநவமி உத்ஸவம் நடத்திவந்தார். ஸ்ரீராமனுடைய அநுக்ரஹத்தால் ஏராளமானத்ரவ்யம் ஸம்பாதித்து இச்சென்னையில் ஸ்ரீசென்னைக்கேசவ ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதிகளிலும், ஸ்ரீரங்கம், ஸ்ரீபெரும்பூதூர், திருமழிசைமுதலிய திவ்யக்ஷேத்ரங்களில் பகவதாராதனம் பாகவதாராதனமும் செய்துவந்ததுமல்லாமல் இனிமேலும் சாச்வதமாய் இத்தர்மங்கள் நடந்துவரும்படி மாதம் 1க்கு ரூ 1500 வருமானம் வரக்கூடிய ஸ்தாவர ஸொத்தையும், ரூ (0,000 ரொக்கத்தையும் தர்மத்துக்கு விநியோகித்திருக்கிறார்.

ஒன்றரை லக்ஷம் ரூபாய்கள் வரையில் சிலவு செய்து, ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்களுடைய உபயோகத்துக்காகக் கோவிந்தப்பநாயக்கன் தெருவில் விசாலமான அழகிய ராமாநுஜகூடமொன்றை நிர்மாணம் செய்திருக்கிறார். இதில் ஸ்ரீமத்ராமாயணகதையை ஜநங்கள் ப்ரத்யக்ஷமாய்ப்பார்த்து ஆநந்திக்கும்படி 185 படங்களை நிர்மாணம்செய்து, அவைகளை ஏராளமான தனவ்யயம்செய்து இந்தக்கட்டடத்தில் சென்றமாதத்தில் ப்ரதிஷ்டைசெய்துவைத்தார். இதில் நமதுஸபையின் வார்ஷிகமஹாஸங்கமானது சென்ற இரண்டு வர்ஷங்களாக நடந்து வருவது நமது ஆப்தர்களுக்குத் தெரிந்தவிஷயம். இக்கட்டடத்தை நமக்கு உதவியதுமன்றி, ஷை மஹாஸங்கங்களின் சிலவுகளுக்கு த்ரவ்யஸஹாயம்செய்தும், அதுஸம்பந்தமான ததீயாராதநத்தைச் செய்தும், அவர் நமதுஸபைக்குச் செய்திருக்கும் உபகாரங்களைத் தீபிகாபிமானிகள் அப்போதைக்கப்போது அறிந்திருப்பார்கள். இந்த ச்ரேஷ்டருடைய இத்தகைய உதவிகளையும், ஸ்ரீவைஷ்ணவமதாபிமானத்தையும் கணிசித்து நமது ஸபையின் சென்ற வார்ஷிகக்கூட்டத்தில் அவர் நமதுஸபையின் போஷகர்களில் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் ஜீவித்திருந்தால் நமது ஸபைக்கு இன்னும் வெகு அநுகூலங்கள் கிடைத்திருக்கும்.

அவருடைய வியோகத்தால் வருந்துகின்ற அவர் குடும்பத்தாருக்கு நம அந்தரங்கமான அநுசோசகத்தைத் தெரிவிக்கின்றோம்.

## ரக்தாக்ஷி வருஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ தினசரிக் குறிப்பு.

## (Calendar.)

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை அநுஸரித்தவர்களுக்கு மிகவும் உபகாரமாயிருக்கும்படி ஒரு நாளுக்கு ஒரு காகிதமடங்கிய நாளது ரக்தாக்ஷி வருஷத்திய தினசரிக் குறிப்பு அச்சில் இருக்கிறது. இதில் அயனம், ருது, மாதம், பக்ஷம், திதி, நக்ஷத்திரம், வாரம் இவைகளும், ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அஸாதாரணமான ஆழ்வார் ஆசார்யர்கள் திரு நக்ஷத்திரங்களும், மற்றும் விசேஷ தினங்ககளும், பொதுவான பண்டிகை முதலியவைகளும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம மாதமும் தேதியும் அடங்கியிருக்கிறது. ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவர்கள் க்ருஹத்திலும் அவச்யம் இருக்கவேண்டியது.

ஸ்வல்ப ப்ரதிகளே அச்சிடப்படுவதினால் அபேக்ஷை உள்ளவர்கள் ஏப்ரல்மீ 10உக்குள் தங்கள் திருநாமத்தை கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி பதிவு செய்துகொள்ளவும். ஏப்ரல்மீ 11உ வெளியிடப்படும்.

பெரிய அளவு 0—8—0 சிறிய அளவு 0—6—0 தபாற்கூலி வேறு.

சென்னை, 17—3—24.

மானேஜர்,

**நிகமபரிமளம்,**

ஸ்ரீ சடகோப நிலையம், மௌண்டு ரோடு, சென்னை.

## ஹரிஸமய திவாகரம்

இஃது மதுரையில் பண்டிதர் ஆ. அரங்கராமாநுஜப்பிள்ளை யவர்களால் வெளியிடப்படும் மாதாங்கப்பத்ரிகை. இதன் முதற்பகுதி வெளிவந்திருக்கிறது. 'வைதிகசமயக் கொள்கைகளையெல்லாம் எளிதாயறிந்து கொள்ளுதற்குச் சாதனமாக, இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட' தெனக் கூறப்படுகின்றது. இதற்குஸம்ப்ரதாய ஜ்ஞர்களான வித்வான்கள் விஷயதானம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. மதவிஷயத்தில் பாடுபடும் பத்ரிகைகளுக்கு இக்காலத்தில் தகுந்த அளவில் ஆதரவுகிடைப்பதில்லை யாகிலும், இத்தகையவைகள் நாட்டில் அதிகமாகவில்லை யென்பதுதிண்ணம். ச்ரிய:பதியின் க்ருபையால் இப்பத்திரிகை நாளடைவில் சிறப்பாய்வளர்ந்து வருமென்று நம்புகிறோம்.

## தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

இது மேல் குறிக்கப்பட்ட ஆழ்வாரின் நவரஸமடங்கிய திவ்ய சரித்ரத்தை தமிழில் நாடகரூபமாய், வாசிப்போர் தத்வார்த்தங்களை ஸுலபமாய் அறிந்து கொள்ளும்படி ஸ்ரீ உப. வே. சேட்டலூர் வித்வான் C. R. ஸ்ரீநிவாஸமூர்த்தி ஸ்வாமியால் எழுதப்பட்டுள்ளது. அபிநயித்தால் மிகவும் ஆநந்தமாயிருக்கும். இதன் விலை அணு 10. வேண்டுவோர், No. 2 ஆழ்வார்நிலையம், சரவணமுதலித் தெருவு, வேப்பேரிபோஸ்டு, சென்னை, என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

Published by the Secretary, Sri Vaishnava Siddanta Sabha,

Purasawalkam, Madras.